முழக்கம் 02

யாழ் 01

# யாழ் முழக்கம்

ஆடி - ஆவணி



## தமிழ் மண் பெற்றெடுத்த வீரப்புதல்வி



## இனப்பிரச்சனைக்கு தீர்வு இல்லையா?



## விஜய்க்குப் பிடித்த த்ரிஷா

விலை 80/=

yaalmulakkam@gmail.com பல்சுவை மாத இதழ்


அஜ்மீர் டெக்ஸ்
AJMEERTEX
பெண்களுக்கான சாறி சல்வார், ஸ்கேட் & பிளவுஸ்,
ஜீன்ஸ் & ரொப், ஆண்களுக்கான சேட், சோட்ஸ், ரவுசர், ரீசேட்
போன்ற ஆடைகளை நவநாகரீகமான வடிவில், குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்
அஜ்மீர் டெக்ஸ்
118, MAIN STREET,
POINT PEDRO.
0776645050


SARAVANA
TEXTILE
ஆண்களுக்கான சேட், சோட்ஸ், ரவுசர், கோட் சூட்
பெண்களுக்கான சல்வார், சாறி பிளவுஸ் போன்ற
ஆடைகளை நவநாகரீகமான வடிவில்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய நகரின்
முன்னணி நட்சத்திரம்
சரவணா ரெக்ஸ்
171, பிரதான வீதி, நெல்லியடி.
(சம்பத் வங்கி அருகாமையில்)
தொ.இல :0778448045, 0212260292

# யாழ் முழக்கம் - பல்சுவை மாத இதழ் -

முழக்கம் - 02


பிரதம ஆசிரியர்

வே.தவச்செல்வம் (J.P)

தும்பளை கிழக்கு,

பருத்தித்துறை.

T.P : 0779229842

E-mail : Yaalmulakkam@gmail.com



**ஆசிரியர் குழுவினர்**

சி.நவீந்திரா

சூ.டர்சிகா

இ.விதுர்ஷா

ப.அபிலாஷா

த.ஜெனித்தா

இ.சுவேதா

ந.நளாயினி

சி.கர்ணிகா

ம.நிதர்சனா

யோ.கிருஷாந்தினி

ச.லாவண்யா

ச.பவானி

சு.நிறஞ்சிதா


## ஆசிரியர் உள்ளத்தில் இருந்து

யாழ்முழக்கம் என்ற சஞ்சிகையின் முதலாவது வெளியீட்டை முழுமுதற் கடவுளாகிய சிவனின் [illegible] பருத்தித்துறை சிவன் கோவில் மண்டபத்தில் கல்வியியலாளர்கள். சமூகஆர்வலர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் அரசியல் பிரமுகர்கள் என மும்மத தலைவர்களின் ஆசியுடன் வெளியிட்டு வைத்தோம் இவ்வெளியீட்டின் போது எங்களிற்கு ஆதரவும் ஊக்கமும் தந்த கல்வியியலாளர்களையும் ஏனைய துறை சார்ந்த அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து 'யாழ்முழக்கம்'' அவர்களுடன் கைகோர்த்துக் கொள்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக எமது சஞ்சிகையின வாசகர்கள் விளம்பரதாரர்கள் விற்பனை முகவாகளையும் நாம் மறந்து விடவில்லை. எமது சஞ்சிகையின் உயிர்நாடியான உங்களின் உறவுதான் எங்களின் பலம் உங்களின் உறவு எங்களின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் உரம் ஊட்டும் என நம்புகின்றோம். எங்களது தேசத்தின் உறவுகளின் கலை, கலாச்சாரம், கல்வி, பாரம்பரியம், அரசியல் நிலைப்பாடு என்பவற்றை எந்தப்பக்கச் சார்பும் இன்றி யாழ்முழுக்கம் தொடர்ந்தும் நடுநிலமைப் பார்வையுடன் முன்வைக்கத் தவறமாட்டாது. ''யாழ்முழக்கம்'' வடமராட்சிப்பகுதியில் இருந்து மண்வாசனையுடன் தொடர்ந்து வெளிவரும் அதற்கு உங்களின் ஒத்துழைப்பு எமது பக்கம் தொடர்ந்தும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன்.

என்றும் அன்புடன்

பிரதம ஆசிரியர்

லயன்.வே.தவச்செல்வம் **(J.P)**

## உள்ளே.....


இனப்பிரச்சனைக்கு தீர்வு இல்லையா? 01

பெண்ணியம் 04

தமிழ் மண் பெற்றெடுத்த வீரப்புதல்வி தயானியுடன் சில நிமிடங்கள் [illegible]

பூங்கோதை (சிறுகதை) 9

சக்தி யூனியர் சூப்பர்ஸ்ரார் கலக்ஸனின் இசைப் பயணம் தொடர்பான நேர்காணல் 12

காலக்கரங்களில் வேம்படியாள் 14

பூகோளமயமாக்கல் 17

பணிவு நயம் 19

பெண்களாலும் முடியும்! 22

முச்சந்தியில் 24

இணையத்தளங்கள் 25

கவிமுழக்கம் 28

சாதனை வீரன் செந்தூரன் 32

நகைச்சுவைத் துணுக்குகள் 33

சினிமா வாழ்க்கை 34

நட்பிற்கும் ஒற்றுமை மரத்துக்குமுள்ள 36

அனுவின் வாழ்க்கைப் பாதை தொடர்கதை 37


புத்திசாலிக்கிளி 38


கன்டோஸ் தயாரிப்பு 39


ஆயுள் வேதம் 40

# இனப்பிரச்சனைக்கு தீர்வு இல்லையா?

தமிழர்களின் தேசியப்பிரச்சனையான இனப்பிரச்சனை தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் இழுபட்டுச் செல்கின்றது. இதனை தீர்ப்பதற்குரிய முன்னெடுப்புக்களோ அல்லது அறிகுறியோ தென்படுவதாக இல்லை. இந்திய பிரதமர் நரேந்திர மோடி வந்தபோது இருந்த எதிர்பார்ப்புகளும் புஸ்வானமாகி விட்டது. தென் இலங்கைத் தலைமையகம் தமிழர்களை ஏமாற்றுவதிலும் காலத்தை குறிப்பதிலும் குறியாக உள்ளன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் தலைமைகளும் இனப்பிரச்சினை தீர்வுக்கான யோசனைகளை முன்வைப்பதிலோ துளியாகவும் கவனத்தை செலுத்தாமல் தங்களது தனிப்பட்ட பதவி ஆசனங்களிற்காக தங்களுக்குள் தாங்களே அடிபட்டுக் கொள்ளும் மனோநிலையில் தான் ஒட்டு மொத்தத்தமிழ் அரசியல் தலைமையும் இன்று உள்ளன. தமிழ் தலைமைகளின் இத்தகைய செயற்பாடு தென் இலங்கை அரசியல் வாதிகளிற்கு சாதகமான ஒன்றாகவே காணப்படுகிறது. புதிய அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கப்போகிறோம் என்று அறிவித்த தமிழ் தலைமைகள் புதிய அரசிடம் இனப்பிரச்சனை தீர்வுபற்றி ஏன் பேசவில்லை சரி வெளிப்படையாக பேசினால் அரசியல் குழப்பங்கள் வரலாம் என்று கருதினால் திரைமறைவில் பேசி இனப்பிரச்சனை தீர்வு தொடர்பில் எழுத்து மூலமான ஒரு உத்தரவாதத்தை தமிழ் தலைமைகள் பெற்றிருக்கலாமே ஏன் தமிழ் தலைமைகள் இதில் தொடர்ந்தும் தவறு இழைத்து வருகின்றன. என்ற கேள்வியை தமிழ் புத்திஜீவிகளோ அல்லது சாதாரண மக்களோ தமிழ் தலைமைகளிடம் ஏன் கேட்கவில்லை? தமிழர் பிரச்சனைக்கான தீர்வு வடமாகாணசபையுடன் முற்றுப் பெற்று விட்டது. என்று தமிழ் தலைவர்கள் கருதுகின்றனரா? என்ற கேள்வியும் இன்று பலமாக எழுந்து நிற்கிறது. முள்ளிவாய்க்கால் முடிவுகளுடன் தமிழர்களின் இராணுவ பலம் முடிவிற்கு வந்தது போல தமிழர்களின் அரசியற் பலமும் முடிவிற்கு வந்து விட்டது என்று கருதலாமா? அப்படியென்றால் மூத்த அரசியல்வாதிகள் என்று சொல்பவர்களும் பழுத்த அரசியல்வாதிகள் என்று சொல்பவர்களும் தமிழ் மக்களின் நலனில் அக்கறை உள்ளவர்கள் போல காட்டிக் கொண்டு நாடகம் ஆடுகிறார்களா? தமிழர்கள் கொடுத்த விலைகளிற்கு அதிகாரம்







இல்லாத மகாண சபை ஈடாகி விட்டதா? தமிழர்களின் தலைவிதியை இணக்க அரசியலும் மாகாண சபையும் தீர்மானிக்கப்போகின்றதா? அல்லது நடைமுறைச்சாத்தியம் இல்லாத தமிழ் இனவாதத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னனி வெளிப்படுத்துகிறது. என்று இளைய தமிழ் தலைமைகள் குற்றம் சாட்டினாலும் அவர்களின் கொள்கைகளுடனும் கோட்பாட்டுடனும் தமிழ் மக்கள் தற்போது கரம் கோர்ப்பதை தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாகவே தற்போது பார்க்க முடிகிறது. ஆனால் ஒட்டு மொத்தத்தில் குறைந்தது பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் உடைய ஒரு தீர்வுத் திட்டம் ஆவது இன்று தமிழர்களிற்கு தேவையாக உள்ளது. தமிழர்களின் பூர்வீக நிலப்பரப்பில் இன்று வன்முறைகளும், காட்டுதர்பாரும், கஞ்சா, குடு விற்பனையும், அடிதடி சண்டித்தனங்களும் நாளுக்குநாள் அதிகரித்தே வருகிறது. பாதிக்கப்படுபவர்கள் முறைப்பாடு செய்தால் அந்த முறைப்பாட்டையும் இந்த உரியவர்கள் கணக்கில் எடுப்பதில்லை. இதனால் தான் யாழ் மாவட்டத்தில் வன்முறைகளும் காட்டுதர்பாரும் கொலைகளும் இன்று தொடராக அரங்கேறி வருகிறது. வெளிப்படையாக முறைப்பாடுகள் பதிவதும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக கூறுவதும் ஒரு நாடகமாகவே அரங்கேறி வருகிறது. நீதிமன்றங்களின் செயற்பாடுகள் திருப்தி கரமாக இருக்கின்ற போதிலும் சில இடங்களில் வேலியே பயிரை மேயும் சம்பவங்கள் நடக்கின்றன. உரியவர்கள் சரியாக நடந்து கொண்டால் தான் நீதிமன்றம் தனது பணியை சரியாக முன்னெடுக்க முடியும். சரியான சுயாதீனமான ஒரு நீதி நிலை நாட்டப்படவேண்டுமானால் தமிழர்களிற்கு பொலிஸ் அதிகாரம் இன்று அவசியமான ஒன்றாகவே இருக்கின்றது. அத்துடன் சரியான வளப்பங்கீட்டையும் அபிவிருத்தியையும் தமிழர்கள் அடைய வேண்டுமாக இருத்தல் காணி அதிகாரமும் தமிழர்களிற்கு இன்று அவசியமான ஒன்றாகவே இருக்கிறது. எனவே தமிழர்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வு இழுபட்டுச் செல்வதற்கும் அதை தீர்ப்பதற்கும் முன்னர் புலிகளையே அரச தரப்பு குற்றம் சாட்டி வந்தது. இன்று புலிகள் இல்லாத சூழ்நிலையில் இனப்பிரச்சனையை தீர்ப்பதில் உள்ள தடைக்கற்கள் யார் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். தமிழ் தலைமைகளும் இனப்பிரச்சனைக்கான தீர்வு யோசனைகளை அரசிடமும், இந்தியாவிடமும், பொதுமக்களிடமும் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் தமிழர்களின் நலனில் அக்கறையுடன் செயற்பட்டுவரும் மன்னார் ஆயர் உட்பட சர்வமதத் தலைவர்களையும் ஒருங்கிணைத்து தமிழ் அரசியல் தலைமைகளும் கட்சி பேதங்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் எல்லாவற்றையும் களைந்து விட்டு ஒரு பொதுவான சந்திப்பு மேடை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் இனப் பிரச்சனை தீர்விற்கான அழுத்தத்தையும் தீர்வுத் திட்டம் குறித்த யோசனைகளையும்



தமிழர் தரப்பு முன்வைக்க வேண்டும். இதன் மூலம் தமிழர்கள் தங்களின் வாழ்வியலிற்கான அரசியல் போரில் அவர்கள் புரிந்த தியாகங்கள் சொத்தழிவுகள் உயிர் இழப்புகள் என்பவற்றிற்கு ஈடான தீர்வு கிடைக்காவிட்டால் ஓரளவிற்கு தமிழர்கள் தங்களைத் தாங்களே நிர்வகிக்கக்கூடிய நடைமுறைச்சாத்தியமான தீர்வினை அடைந்தாலே தற்போதைக்கு தமிழர்களிற்கு ஒரு நிம்மதிப் பெருமூச்சை கொடுக்கும் இவை பற்றி தமிழ் தலமைகள் சிந்திக்குமா? அல்லது தேர்தல் திருவிழா வருவதால் தமிழர்களின் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பில் மறந்து விடுவார்களே? அடுத்த தேர்தல் திருவிழா மீண்டும் வரும்வரை காலத்தை கடத்துவார்களா? பொறுத்திருந்து பாருங்கள்.

**வே.தவச்செல்வம்**

## பொது அறிவு துணுக்குகள்

01) முதலாளித்துவ பொருளாதார அமைப்புக்கு தலைமை தாங்கிய நாடு எது?
ஐக்கிய அமெரிக்கா

02) தற்போது அதிக கடனுடைய நாடு எது?
கிரேக்கம்

03) மிகவும் புத்திக் கூர்மையுடைய மிருகம் எது?
சிம்பன்சி

04) இலங்கையின் மிக முக்கிய மழைக்காடு எது?
சிங்கராஜவனம்

05) 20 கோடி வருடம் உயிர் வாழும் தாவரம் எது?
மூங்கில்

06) வடமேற்கு கரையிலுள்ள இலங்கைக்குரிய மிகப்பெரிய தீவு எது?
தலைமன்னார்


07) தொடர்ச்சியாக நீர் பாய்வதனால் பாதிக்கப்படும் தெற்காசிய நாடு எது?
வங்காள தேசம்

08) ஒரு தலைமுறை இடைவெளி எத்தனை வருடங்கள் ஆகும்?
28 வருடங்கள்

09) பெண்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கும் நாடு எது?
இஸ்ரேல்

10) உலகில் அதிகளவான புத்தகங்களை உருவாக்கும் நாடு எது?
சீனா

# பெண்ணியம்




முதலில் பெண்ணியம் என்றால் என்ன? என்பதை நோக்குவோமேயானால் ஒரு பெண்ணிலிருந்து கருத்துக்கள் எழுவது "பெண்ணிலை வாதம்" ஆகும். இதனாலேயே பெண்ணியத்தை தமிழில் பெண்ணிலை வாதம்: என்றும் ஆங்கிலத்தில் "Feminsm" என்றும் சொல்வர். இது மட்டுமன்றி பெண்ணியத்திற்கு இன்றும் பல விரிவான வரையறைகளும் உண்டு. அதாவது பெண்களை தாழ்வுபடுத்தும் அரசியல், பொருளாதார, சமூக கட்டமைப்புகள், நடைமுறைகள், கலாசார, அரசியல், இயக்கங்கள், செயற்பாடுகள் கோட்பாடுகளின் தொகுப்பாகும். இவ்வாறு பல்வேறாக பெண்ணியத்தை வரையறுக்கலாம். குறிப்பாக சொன்னால் பெண்ணியத்தினை திட்டவட்டமாக வரையறுப்பதென்பதே ஒரு முடியாத நிலையாகத்தான் உள்ளது.

பல்வேறு நாடுகளால் பெண்ணுரிமை மழுங்கடிக்கப்பட்டு காணப்பட்டதோடு மட்டுமல்லாது பெண்ணுரிமை நாட்டிற்கு ஒரு பிரச்சினையாகவே கருதப்பட்டது. இருப்பினும் கி.பி 19ம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே வெளியிடப்பட்ட "இரண்டாவது பாலினம்" (The second sex) என்ற நூலிலிருந்து பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாக முன்வைக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் மகா பாரதியார், பெரியார் ஈ.வெ இராமசாமி ஆகியோர் பெண்விடுதலை பற்றி புதுமைக்கண்ணோட்டத்துடன் பெண்களுக்கான குரல் கொடுத்ததும் நூல்கள் எழுதியதும் யாவரும் அறிந்ததே.

நாம் தற்போதைய பெண்ணியத்தை எடுத்து நோக்குவோமேயானால் கலை, கலாச்சாரம், இலக்கியம், அரசியல், பொருளாதாரம் ஆகிய பல்வேறுபட்ட தளங்களில் பெண்கள் வளர்ச்சி கண்டு வருகின்றார்கள்.

பெண்ணியம் என்றால் ஆணுக்கெதிரானது ஆண்களை அடக்கியாள்வது போன்ற பல முட்டாள்களின் கருத்துக்கள் உள்ளது. ஆண்களை எதிரிகளாக கருதுபவர்கள் பெண்ணியவாதிகள் அல்ல ஏன்? ஆண்கள் கூட தொன்மைதொட்டு பெண்ணியம் பற்றி பேசிக் கொண்டேதான் இருக்கின்றார்கள். ஆகவே நாம் அனைவரும் இப்படியான கருத்துக்களை புறக்கணிக்க வேண்டும்.

ஒரு பெண்ணை எடுத்து நோக்குவோம் ஒரு பெண் ஆணுக்கு நிகராக படித்து வேலைக்கு சென்று ஆண்களோடு சமனாக வேலைசெய்து இரவு வேளைகளிலும் கூட வீடு திரும்புகிறாள் என்றால் இதில் பெண்ணியம் இருக்கின்றது எவ்வாறெனில் மிகவும் பழைய காலத்தில் ஒரு பெண்ணானவள் ஏடுதொடுவதே பாவமென்று பெண்களை மடந்தைகளாக்கி

வைத்திருந்தார்கள் ஆனால் தற்காலத்தில் சமூகத்தின் அறியாமை நீங்கியமையும் பல பெண்களின் போராட்டமும் சமூக சீர்திருத்தமுமே இதற்கான காரணம்.

பெண்களுக்கு கிடைக்கவேண்டிய கல்வி, வேலை, திருமணம், பாதுகாப்பு. இலட்சியம், பொழுதுபோக்கு என்ற அனைத்து ஆண்களுக்கு கிடைக்கும் உரிமைகளும் பெண்களுக்கும் கிடைக்கவேண்டும். இதற்கு பெண்கள் மட்டும்தான் குரல் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சம உரிமைக்கான குரல்களை எவராலும் எழுப்ப முடியும்.

## கல்வி

கல்வி தற்பொழுது பெண்கள் கல்வியில் மிகவும் பாரதூரமான முன்னேற்றத்தை கண்டுள்ளனர். ஆண்களோடு ஒப்பிடும் அளவிற்கு மிகவும் முன்னிலையில் உள்ளனர் ஆனாலும் ஆண்களை போல் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும்



தங்களது வேலையை சுதந்திரமாக செய்யமுடியாதுள்ளது. பெண்களை ஒரு விலைப்பொருளாக கருதும் ஆண்களும் வேலை முடித்து இரவு வேளைகளில் வீடு திரும்புவதை பிழையான கண்களோடு நோக்கும் சமூகம் உள்ளவரை பெண்களிற்கு சுதந்திரம் கிடைக்காது. இதையே ஒரு ஆணாக இருந்தால் அவன் வேலை செய்யும் எந்த இடத்திலும் தங்களது வேலையை சுதந்திரமாக வேலை செய்துவிட்டு இரவு வேளைகளில் வீடு திரும்புகிறான் இதை அதே சமூகம் நேரான சிந்தனையோடு நோக்குகின்றது. இதில் ஒரு பெண்ணின் சுதந்திரம் ஒரு ஆனால் மட்டுமல்ல சமூகத்தாலும் பறிக்கப்படுகின்றது. இங்கு பெண்ணியம் எங்கே?

## திருமணம்

நாம் திருமணத்தை எடுத்து நோக்குவோமேயானால் ஒரு பெண்ணை ஓர் ஆணிற்கு கொடுக்கும் போது பெண்ணை மட்டுமல்ல பெண்ணோடு சேர்த்து பொன்னையும் பொருளையும் கேட்கின்றனர். காரணம் ஆண்கள் பெண்களை காலம் முழுவதும் உழைத்து காக்க வேண்டும் ஆண் தனது கன்னிகளை குடும்ப பொறுப்பை முடித்து தனது




புது வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும் என்பதாகும். ஆனால் இதையே ஒரு பெண்ணாலும் செய்ய முடியும். உதாரணமாக பெண்களிற்கு சீதனத்தை கொடுத்து பாருங்கள் பெண்ணும் ஆணுக்கு நிகராக படித்திருக்கின்றாள் பெண்களாலும் வேலை செய்து குடும்பத்தை வழிநடத்த முடியும் பெண்களுக்கும் திருமணத்திற்கு முன்னாள் ஓர் குடும்பம் உண்டு. இங்கே பெண்ணிற்கு சமவுரிமை கிடைக்கவில்லை பெண்கள் ஆண்களிலும் விலை குறைந்தவளாக அதாவது தாழ்த்தப்பட்டவளாக காணப்படுகின்றாள் அவளது ஆற்றல்களும் திறமைகளும்

மதிக்கப்படவில்லை என்பதை
தெளிவாக அறியமுடிகின்றது.

## பாதுகாப்பு

ஒரு பெண் வீதியால் செல்வதிலிருந்து வீட்டில் தனியாக வாழக் கூட முடியாத நிலை காணப்படுகின்றது. வீதியால் தனியாக செல்லும் போதோ அல்லது பல பெண்கள் ஒன்றாக செல்லும் போதோ பல ஆண்களில் பகிடிவதைக்கு ஆளாகின்றார்கள்

பெண்கள் இது அவளது மன உளைச்சல் தூண்டும் காரணியாக உள்ளது ஆனால் ஆண்கள் செல்லும் போது என்றால் எந்த இடையூறுகளும் பெண்களால் அவர்களிற்கு விளைவிக்கப்படுவதில்லை



அதே போலத்தான் ஒரு பெண் கணவனை இழந்து தனியாக ஒரு வீட்டில் வாழ்கின்றாள் என்றால் அதை சமூகம் தப்பான எண்ணத்துடன் நோக்குகின்றது. அதுமட்டுமல்லாமல் அந்த பெண்ணை சிலர் தீண்டி பார்க்க முற்படுகின்றனர். ஒரு ஆண் எந்த இடையூறும் இன்றி தனியாக வாழக்கூடிய இந்த சமுதாயத்தில் ஏன் ஒரு பெண்ணால் வாழ முடியாமல் உள்ளது. இதில் பெண்ணியம் எந்த அளவிற்கு உள்ளது.

இன்றைய காலப்பகுதியில் பாலியல் துஷ்பிரயோகம் என்ற ஒன்று திரும்பும் இடமெல்லாம் இடம்பெற்ற வண்ணமே உள்ளது. 5 வயது பாலகி முதல் 50 வயது கிழவி வரையான யாரையும் இது விட்டு வைக்கவில்லை.

பலசமூகவாதிகள் கூறுகின்றார்கள். "பெண்களின் நவநாகரிக உடைகள் தான் இந்த சம்பவங்களிற்கு காரணமாம்" அப்படியெனில் 5 வயது பாலகியிடம் எதை கண்டார்களாம் இவர்கள் அவ்வாறெனில் ஆடை வடிவமைப்பு செய்யும் வடிவமைப்பாளர் ஆடை நெய்யும் தொழிலாளிகள், விற்பனையாளிகள் அனைவரையும் தான் குற்றம் சாட்ட வேண்டும். தனியே ஒரு பெண்ணிடம் மட்டும் குறைகளை காண முயற்சிக்காதீர்கள்.


பெண்களுக்கு முழு சுதந்திரம் கிடைக்க வேண்டும்.

பெண்ணடிமைக் காலத்திலேயே பெண்கள் கடவுளுக்கு ஒப்பானவர்களாக தான் காணப்பட்டார்கள். "பூமி மாதா", "கடல் அன்னை", "கங்கை", "யமுனை" போன்ற இயற்கைக்கு பெண்களின் பெயரையே சூட்டினார்கள்.

பெண்ணானவள் கல்வியிலும், வீரத்திலும் சளைத்தவளல்ல இதை நாம் புராணங்களிலிருந்தும் இதிகாசங்களிலிருந்தும் அறியமுடிகின்றது. இருப்பினும் பெண்களிற்கு இதுவரை காலமும் ஏன் சுதந்திரம் கிடைக்கவில்லை. பெண்களிற்கு "கள்ளிப்பால்" கொடுக்கும் காலம் மாறி "கல்விப்பால்" கொடுக்கும் காலம் வந்துவிட்டது. இருப்பினும் பெண்கள் சுதந்திரம் எங்கே? பெண் சுதந்திரத்திற்காக மனிதத்துவமுடைய நேராக சிந்திக்கக்கூடிய நடுநிலைமை மனம் படைத்த அனைவரும் போராட முடியும் பெண்களும் ஆண்களிற்கு எல்லாவற்றிலும் சமனானவர்களாக வாழவேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

-சு.டர்சிகா-

# தமிழ் மண் பெற்றெடுத்த வீரப்புதல்வி தயானியுடன் சில நிமிடங்கள்



பாடசாலைகளுக்கு இடையிலான துப்பாக்கி சுடும் போட்டியில் நெல்லியடி ம.ம.வி மாணவி ஸ்ரீ.சிதம்பரலிங்கம் தயானி தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றதுடன் சர்வதேச ரீதியில் விளையாடுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. வெற்றியீட்டிய இம் மாணவிக்கு யாழ் முழக்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றது.

கேள்வி : உங்களைப் பற்றி ஓர் அறிமுகம்?

பதில் : எனது பெயர் தயானி ஸ்ரீசிதம்பரலிங்கம் நான் வடமராட்சியில் உள்ள கரவெட்டி பிரதேசத்தில் அத்தாய் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது ஆரம்பக்கல்வியினை நெல்லியடி அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியையும் உயர்கல்வியையும் யா/நெல்லடிய மத்திய கல்லூரியினையும் பயின்றேன்.

கேள்வி : துப்பாக்கி சுடும் போட்டியில் முதல் தடவையாக சூட்டுப் பயிற்சி எங்கு பெற்றீர்கள்?

பதில் : துப்பாக்கி சுடும் போட்டியில் ஈடுபடுவதற்காக எமது பாடசாலையில் இருந்து 6 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டு முதல் தடவையாக மதவாச்சிக்கும் பின்னர் கொழும்பு நாலந்தாக்கல்லூரியிலும் பயிற்சிகளைப் பெற்றேன்.

கேள்வி : முதல் தடவை எங்கு போட்டி நடைபெற்றது எத்தனையாவது இடத்திற்கு வந்தீர்கள்?

பதில் : முதல் தடவையாக மதவாச்சியில் போட்டி நடைபெற்றது. அங்கு எமது 6 பேர் கொண்ட குழுவில் இருந்து இரண்டு பேர் தேசிய ரீதியிலான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர். அதில் நானும் ஒரு நபராவேன்.

கேள்வி : இந்த முயற்சியில் முன்நின்று வளர்வதற்கு காரணமாய் இருந்து ஊக்குவித்தவர்கள் யார்?

பதில் :- எமது பாடசாலையின் அதிபரான திரு.எஸ்.சேதுராஜா அவர்களும் உடற்கல்வி ஆசிரியரான அன்ரனி அவர்களும் மற்றும் பெற்றோர்கள் ஏனைய ஆசிரியர்கள், நண்பர்கள்

கேள்வி : இதனூடாக நீங்கள் சாதித்தமை என்ன என்பது தொடர்பாக கூறுங்கள்?

பதில் : சிறுவயதிலிருந்தே விளையாட்டுத்துறை மிகவும் பிடிக்கும் ஏதாவது சாதிக்கவேண்டும் என்ற

விருப்பம் இருந்தது. அத்தகைய சந்தர்ப்பத்தில் துப்பாக்கி சுடும் போட்டி சாதனை செய்வதற்கான ஓர் அரிய வாய்ப்பினை அமைத்தது. இவ்வகையில் துப்பாக்கி சுடுவதால் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றதோடு சர்வதேச ரீதியில் விளையாடுவதற்கான வாய்ப்பும் கிடைத்ததுடன் மேலதிக பயிற்சிகளை பெறுதவற்கு அமெரிக்காவிற்கும் செல்வதற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளேன்.

கேள்வி : உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?

பதில் : சிறந்த தொழில் வாய்ப்பினை பெறல்

கேள்வி : உங்கள் துப்பாக்கி சுடும் திறமை தொடர்பாக மாணவர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் கருத்து?

பதில் : இவ்வாறான சந்தர்ப்பங்களை கிடைக்கும் பொழுது அதனை தட்டிக்கழிக்காமல் முழுமனதாக ஏற்று பங்கு கொள்ளுங்கள் அத்தோடு வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் இவ்வாறான போட்டிகளில் பல மாணவர்கள் பங்குபற்றி வெற்றி பெற வேண்டும் மீண்டும் மீண்டும் முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம் என்பது உண்மை.

கேள்வி : நீங்கள் விளையாட்டுத்துறையில் எவ்வகையான சாதனைகளை படைத்தீர்கள் என கூறுங்கள்?

பதில் : விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்ட காரணத்தினால் பாடசாலைகளில் இடம் பெறும் பல விளையாட்டுக்களில் ஈடுபடுவோர் குறிப்பாக இல்ல மெய்வல்லுனர் போட்டிகளில் உயரம் பாய்தல், முப்பாய்ச்சல், நீளம் பாய்தல் ஆகிய போட்டிகளினூடாக மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுவேன். அத்தோடு பாடசாலைகளுக்கிடையிலான குழு விளையாட்டுக்களில் கபடி போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும், கிரிக்கெட் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் மேலும் கரப்பந்தாட்டம், எல்லே, வலைப்பந்தாட்டம். போன்ற விளையாட்டுக்களிலும் மாவட்டம் வரை சென்று விளையாடியுள்ளேன். தற்போது துப்பாக்கி சுடும் போட்டியில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளேன்.

நேர்காணல்
சி.நவீந்திரா

---

**யாழ்முழக்கம் சஞ்சிகைக்கான உங்கள் விமர்சனங்களையும் பல்சுவை ஆக்கங்களையும் எதிர்பார்க்கிறோம்.**

**"உங்கள் கருத்துக்கள் எங்கள் சஞ்சிகையை வளப்படுத்தும்"**

**தொடர்பு முகவரி : யாழ்முழக்கம்**
**பிரதம ஆசிரியர்**
**வே.தவச்செல்வம்**
**தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.**

# பூங்கோதை

(சிறுகதை)

வைகறை மேகங்களை துடைத்துக் கொண்டு வெளிவரும் ஆதவனை ஆரோகணித்து வரவேற்க ஆயத்தமாகும் அந்த இளங்காலையில் கேட்கும் இனிய கீதங்களை ரசிப்பதற்காய் இமைக்குள்ளே விழிகளைத் திறந்தபடி அமைதியாகப் படுத்திருந்தவளின் அருகினிலிருந்து தலையை தடவியபடி “பள்ளிக்கூடம் போகல்லயோ நேரமாகுது” என்று மெதுவாகக் கேட்ட குரல் பட்டு மலர்ந்து முனகினாள் பூங்கோதை.

“இண்டைக்கு பள்ளிக்கூடத்தில் கவிதைப் போட்டி என்றெல்லோ சொன்னனி பிள்ள. விடிய வெள்ளண எழும்பி ஒருக்கால் எண்டாலும் குரல் தடக்காமல் வாசிச்சு பார்த்தால் தானே நல்லது. நாலு பேருக்கு முன்னால நடக்கிற போட்டியெல்லோ. எழும்பு பிள்ள” தாயின் அன்புக்குரல் அவளின் திறமைக்கு திறப்பணம் ஆகியது.



கவிதைகளில் அலாதிப்பிரியம் கொண்டு தன்னை ஒரு தலை சிறந்த கவிதாயினியாய் உருவாக்க வேண்டுமென்பதில் கட்டுரை கொண்டவள் இன்னும் தூங்குவாளா என்ன?

கடுகதி போல் தன் கடன்களை முடித்து போட்டிக்கான கவிதையினை தன் நினைவரங்கத்திலே பாடிப்பழகினாள். கண்ணாடியின் முன் கவியரங்கை நடத்திப்பார்த்தவளை பார்த்த பூபதி பூரித்துப் போனாள். “அட இவ்வளவு அழகாக என் மகள் பெரிய போட்டி ஒன்றில் படித்துப் பரிசு பெறுவதை என்று காண்பேனோ...” என்று மனதுக்குள் நினைத்தபடி அகன்று அடுக்களைக்குள் நுழைந்தாள். “அம்மா.....” என்று அழைத்த குரல் கேட்டு திரும்பிய பூபதி வெள்ளைக்குயிலாக நின்ற தன் மகளை கண்டு நிறைந்தாள் மனம். “என்னம்மா சாப்பாடு” என்றவளின் பார்வைக்கு... “உனக்கென்ன பிடிக்குமோ அதைவிட ஏதும் இதுவரைக்கும் செய்திருப்பேனோ இல்லைத்தானே..” இந்தா நெய்த்தோசை” என்றாள் தாய்.

தலை நரைத்தாலும் தன் மகளுக்கெனச் செய்வதில் மனங்கோணாதவள் அவள்: “போய்வாறன் அம்மா ...” செல்லமாய் மகள் சொல்லிப்போகும் வெள்ளை அழகை மனதுள் ரசித்தபடி தன் வேலையில் மூழ்கினாள் பூபதி.

பாடசாலையின் அரங்கம் கவிதைகளால் ஆர்ப்பரித்தது. “தரம் பன்னிரண்டு மாணவி பூங்கோதையின் கவிதை இடம்பெறும்” ஒலித்தது ஒலிவாங்கி. சபையோர் வணக்கத்துடன் ஆரம்பித்த கவிதை சபையோரின் கண்களில் நீர் வழிய “ஆளாய் நீ வளர வேண்டுமென்று யாரும் அறியாமல் தொழுவேனே நானிருந்து “ என்ற வரிகளுடன் நிறைவு பெற இந்த ஆண்டுக்கான மாகாண மட்டப்போட்டிகள் நிறைவு பெற்றன போட்டிகளுக்கான முடிவுகள் அடுத்த வாரம் தெரிவிக்கப்படும் என்று ஒலித்து ஓய்ந்தது ஒலிவாங்கி. அவரவர் தங்கள் பிள்ளைகளை பக்குவமாக ஏற்றிக் கொண்டு வெளியேறிக் கொண்டிருந்த போது இலாவகமாக உள்

நுழைந்து அவளின் காலடியில் நின்றது மோட்டார் சைக்கிள். தலைக் கவசத்தை கழற்றி "என்னவாம் ..... எத்தனையாவது நீ ..." என்று புன்னகையோடு விசாரித்த ஆசையண்ணன் பூங்கோதை. வாசற் கதவை கட்டிப்பித்துக் கொண்டு நின்றவள் போல் "என்னவாம் பிள்ளை" ஆவலின் தன்மை அமைதியாய்க் கனப்பதை அறிந்தவள் போல அடுத்தகிழமை தான் சொல்லுவினமாம் என்பதற்கு .... ஏனாம்.. என்பதாய் தாயின் தலையாட்டல் ... நாள் ஒவ்வொன்றும் நிமிடங்களாய்க் கழிந்து வாரத்தின் நான்காம் நாள் அதிகாலைப்பொழுது ....

"வெள்ளைக்குயிலே'
எந்தன் கவிதைகள்
உனக்காகவே கூடு கட்டுகின்றன.
ஏனெனில் ...
உன் தாலாட்டை தாலாட்டவே...."

வானொலியின் இறுதிக்கவி வரிகளை கேட்டு அதிர்ந்தவளானாலும் யாருடனும் இது பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருந்தவளின் காதுகளில் விழுந்தது தபால்காரரின் மணியோலை. கடிதத்தைப் பெற்றவள் தன்னறைக்குள்ளே சென்று விரித்துப் பார்த்தவளுக்கு வியப்பைத் தந்த செய்தி.

இன்று காலைநேரக் கவியரங்கில் படிக்கப்பட்ட அதே கவிதை தான் .. யாராக இருக்கும் மனம் முணகுகிறாள்... கவிதை முடிவில் எந்தப் பெயரும் இல்லை என்ன கொடுமை தன்னை தானே அலட்டிக் கொள்கிறாள். முடியவில்லை.. அம்மாவிடம் இது பற்றிக் கதைக்கலாமா சொன்னால் விபரீதங்களாக்கி சந்தோசங்களின் அத்திபாரங்களையே சில நேரம் பிளந்துவிடும். எத்தனிப்புக்கள் எல்லாமே அடங்கிப் போக கவிதையை மீண்டும் படிக்கிறாள். அதன் அர்த்தங்கள் அவளைக் குடைகிறது. ஆனாலும் மறுக்கிறது மனம். "என் கவிதைக்கு பதில் கவிதை எழுதியிருப்பது யார்? அன்றைய கவி நிகழ்வில் என் கவிதையைக் கேட்டவர்களில் யாராக இருக்கும்...... என்னோடு படித்தவர்களில் ஒருவரா .. அல்லது சபையோர்களில் யாரோ ஒருவரா..? என சிந்தனையில் பலதையும் நிறுத்திப் பார்க்கிறாள். ஆனாலும் யாருடனும் அது பற்றி ஆலோசிக்கவில்லை வழமை போல நாளாந்தச் செயற்பாடுகள் நடந்தாலும் அவள் பாதையில் வந்த விடயம் அவள் மட்டுமே அறிந்தது. கவிதை எழுதியவரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் எல்லாமே கவிதைகளாய் பிறந்தன அவளுக்கு .. கவிதைகள் ஒவ்வொன்றாலும் வளர்ந்து கால நீரோட்டத்தில் மதிப்பிற்குரிய கவிதாயினியானது பெருமைக்குரியது.

பூங்கோதை வழமை போல கவித்தேடல்களை வளர்த்துக் கொள்வதற்காக நூலகம் ஒன்றுக்குச் சென்று தனக்குப்பிடித்தமானவர்களின் புத்தகங்களை தேடி எடுத்துக் கொண்டிருக்கையில் ஏற்கனவே விழுந்து கிடந்த புத்தகத்தையும் எடுத்துச் சென்று ரசித்து மனம் நெகிழ்ந்தவளுக்கு அதே வரிகள் .. ஆமாம் அதே வரிகள் தான் அசந்து போனாள் .. ஆனந்தப்பட்டாள்.. அந்தக்கவி வரிகளுக்கு சொந்தமானவரை நினைந்து வேதனையோடு விருப்பமும் கொண்டாள்.

"ஒரு போராளியின் கவி வரிகள் அவை" நினைந்துருகி அந்த ஆத் மாணவனின் வீடுபோய்ச் சேர்ந்து .. வாசற் கடவையில் நின்று மனதைத்திடப்படுத்தி "அம்மா.. அம்மா " அழைக்கும் குரல் கேட்காத தென்னவோ ... கடவையை திறந்து உள் நுழைந்த பூங்கோதை வீட்டின் பின் புறத்தில் இருந்து வந்த குயிலம்மாவை பார்த்து" அம்மா இது கவிஞர் பொன்மலரவன் அண்ணன் வீடோ" என்றாள். "ஓம் மேனை வா பிள்ளை" உள்ளுக்கு அழைத்து உட்கார வைத்தவளின் கண்கள் அமைதியாகக் கலங்கியது.

என்னெண்டு தெரியும் பிள்ளை அவன .. நெடுநாளாத் தெரியுமோ.. ? இல்லை யம்மா என்று தொடங்கி தன் மனக் கிடக்கையின் உணர்வுகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் போது .. அவளை இறுக்கி அனைத்து "அவன் ஒரு போராளி .. கெட்டிக்காரன் நல்லாக் கவிதை

எழுதுவான்... கவித எழுதுறவையளையும்
அவனுக்கு பிடிக்கும். ஆரும் கவிதை
எழுதினால் அவயளை ஊக்குவிக்க
பாராட்டி கடிதம் எழுதுவான். போன
வரியமும் பள்ளிக்கூடமொண்டில்
கவிதைப்போட்டிக்கு வரேக்க என்னட்டயும்
வந்திட்டு போனவன் போனது தான்.
உயிரோட வரேல்லப்பிள்ளை"
வேதனையோட சொல்லி முடித்த
குயிலம்மாவின் கால்களில் விழுந்து
வணங்கி மனம் பதைக்க உள்ளுடல்
நடுங்க விடை பெற்றுக் கொண்டு தன் வீடு
சென்றவள் தாய் பூபதிக்கு தன் மனக்
கதவை திறந்தான். பூங்காவலன்
களஙகமில்லாத தன் தங்கையின்
கண்ணீரை வருடித் துடைத்தான். தன்னை
உருக்கி தன் படுக்கையறைக்குச்
செனறவளின் ..

காதில் ... அதிகாலையில் எந்த கீதங்களும்
கேட்கவில்லை. இனிக் கேட்கவும்
வாய்ப்பில்லை.

அன்புடன் உனக்கு..
கவிதைகளினது ஆத்மம் ஆழமானது - அது
உணர்வுகளின் விருட்சமாய் மிளிர்வதை
நான் அறிவேன் - என்
கவித் தனத்தைக் காலம் முழுவதும்
நிலைக்க வைத்தவன் - நீ
தனிமையில் வாழ்வது - எனக்கு
தண்டனையாகிறது
எனவே நானும் உன்னோடு ... என்ற
சமர்ப்பனத்தோடு காதலையும்
சேர்த்து சங்கமித்துப் போயிருந்தாள்.

■ கவிஞர் த.கங்கைஆத்மன்

## கட்டுரைப்போட்டி

**மாணவர்களின் எழுத்தாற்றலையும் திறமையினையும் வெளிப்படுத்தும் நோக்குடன் யாழ் முழக்கம் சஞ்சிகை கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. போட்டியில் மாணவர்கள் அனைவரும் பங்கு பற்ற முடியும்.**

**பின்வரும் தலைப்பை தேர்வு செய்து 200 சொற்களிற்கு குறையாமல் 30-07-2015 ற்கு முன்னர் தங்களது ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.**

### போட்டித் தலைப்பு

### நவீன தொழில்நுட்பங்கள் இளைஞர்களுக்கு நன்மையா? தீமையா?

**அனுப்ப வேண்டிய முகவரி :**
**யாழ்முழக்கம்**
**கட்டுரைப்போட்டி**
**பிரதம ஆசிரியர்**
**வே.தவச்செல்வம்**
**தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.**

## முற்றத்து மல்லிகை

# சக்தி யூனியர் சுப்பர் ஸ்ரார்

## சுலக்ஸனின் இசைப் பயணம் தொடர்பான நேர்காணல்

கேள்வி : உங்களை பற்றி ஓர் அறிமுகம்?

பதில் : எனது பெயர் சிறீதன் - சுலக்ஷன். அம்மா சியாமளா குடும்பத்தில் நான் மூத்தபிள்ளை எனக்கு தம்பி ஒன்று, மூன்று சகோதரிகள். நான் யா/ கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் கல்வி கற்ற மாணவன்.



கேள்வி : நீங்கள் இசைத்துறையில் பயணிப்பதற்கு உங்களை தூண்டிய காரணிகள்?

பதில் : எனது அம்மாவின் அப்பா (பேரன்) ஜெயா சவுந்தராஜன் அவர்கள் ஒரு பாடகராக இருந்தார். அவருடைய தம்பி ஜெயா சுகுமார் அவர்களும் பாடகர், மற்றும் எனது மாமனார் வசீகரன் அவர்களும் ஒரு பாடகர். எனது அம்மாவும் முன்பு பாடகியாக இருந்தார். ஆகவே இசைத்துறையில் இவர்கள் இருந்தபடியால் எனக்கும் அந்த ஆர்வம் இருந்தது.

> **"உண்மை, நேர்மை, விடாமுயற்சி, பயிற்சி இவை யாவும் என்றும் வெற்றி தரும்"**

கேள்வி : உங்களது குடும்ப பின்னணி? உங்களது கலைப்பயணத்திற்கு குடும்பத்தினரின் பங்களிப்பு?

பதில் : நான் 8 வயது சிறுவனாக இருந்த போது எனது பேரனான ஜெயா சுகுமார் அவர்கள் என்னை முதல் முதலாக மேடை அறிமுகம் செய்தார். வீட்டிலும் எனக்கு ஊக்கமளித்து இன்றைய நிலைக்கு வருவதற்கு எனது அப்பாவும் அம்மாவும் காரணமாக இருந்தார்கள்.

கேள்வி : இசைத்துறையில் உங்களது திருப்புமுனை யாது?

பதில் : நான் சிறுவயதில் மேடையில் பாடிக் கொண்டிருந்த போது சக்தி தொலைக்காட்சி நடத்திய Sakthy Junior Super Star பாடகர் தெரிவு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அதில் இறுதி போட்டி வரைக்கும் சென்று வெற்றி அடைந்தேன். அதனால் இலங்கையில் பல பாகங்களிலுமுள்ள ரசிகர்களின் அன்பை பெற்றுக் கொண்டேன். இது எனக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

கேள்வி : நீங்கள் இசையை முறையாக பயின்றவரா?

பதில் : கர்நாடக சங்கீதத்துறையை இப்போது முறைப்படி கற்றுக் கொண்டிருக்கின்றேன்.



கேள்வி : **"Sakthy Super Star"** இசைப்பயணம் பற்றி உங்கள் அனுபவம்?

பதில் : அந்த நிகழச்சி மூலம் மாபெரும் கலைஞர்களுடன் இணைந்த வாய்ப்பும் அவர்களிடம் இருந்து நிறைய விடயங்களையும் அறிந்து கொண்டேன்.

கேள்வி : **"Sakthy Super Star"** மூலம் உங்களிற்கு கிடைத்த நன்மைகள்?

பதில் : ஒவ்வொரு வித்தியாசமான பாடல்களையும் (வேற்று மொழி பாடல், கர்நாடக சங்கீத பாடல், மெல்லிசை பாடல்கள்) யாவற்றையும் அறிந்து பாடக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. மற்றும் என்னுடன் போட்டியிட்ட சக போட்டியாளர்களிடம் இருந்தும் நிறைய விடயங்களையும் அவர்களின் நட்பையும் பெற்றேன்.

கேள்வி : இசைத்துறையில் உங்களை ஊக்குவித்தது யார்? உங்களது குரு யார்?

பதில் : ஊக்குவித்தது எனது அப்பாவும், அம்மாவும் எனது குரு இசைவாணர் முரளி அவர்களும் இலங்கை திரு நாட்டின் முதன்மை பாடகர் S.G சாந்தன் அவர்களும்.

கேள்வி : இசைத்துறையில் நீங்கள் எதிர்நோக்கிய சவால்களும் சோதனைகளும்?

பதில் : நான் பாடுகின்ற ஒவ்வொரு மேடைகளும் சவாலாகத்தான் கருதுகின்றேன். எல்லாக் கலைஞர்களிற்குமே சோதனைகள் தான் அதனை சவாலாக ஏற்று சாதனைகளை நிகழ்த்தும் போது அதை விட பெரும் மகிழ்ச்சி வேறு எதிலும் பார்க்க முடியாது. நான் சக்தி தொலைக்காட்சி நிகழ்வில் கலந்து கொண்ட போது சில வசதியின்மை காரணமாக நிறைய சிரமப்பட்டாலும் அது பெரும் வேதனையாக இருந்தது. ஆனாலும் அதனையும் சவால்களாக ஏற்று வெற்றியடைந்து சாதனைகளாக்கிய போது நிறைய நின்மதிகளும் சந்தோசமும் கிடைத்தது. இப்போது ஒவ்வொரு சோதனைகளையும் சவால்களையும் ஏற்றுக்கொள்ளும் தன்மையை பாடகரும் எனது குருநாதருமான S.G சாந்தன் அவர்களிடம் இருந்து கற்றுக் கொண்டேன்.


கேள்வி : தற்போதைய இளம் கலைஞர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது?

பதில் : உண்மை, நேர்மை, விடாமுயற்சி, பயிற்சி இவை யாவும் என்றும் வெற்றி தரும் என்பதை எனது அப்பா மூலம் அறிந்து கொண்டேன். அதனை எல்லோரிற்கும் கூற விரும்புகின்றேன்.

நேர்காணல்

- சு.டர்சிகா -

# காலக்கரங்களில் வேம்படியாள்




வேம்படி மகளிர் கல்லூரியின் பரிணாம வளர்ச்சியே யாழ்ப்பாண பெண் கல்வியின் வரலாறாகும். யாழ் நகரிலே நிறுவப்பட்ட 1வது பெண்கள் பாடசாலை ஆகும். மங்கையர் மாடங்களில் அடக்கி ஒடுக்கப்பட்டு கூட்டுப் புழுக்கள் போல் இருந்த காலகட்டத்திலே இங்கிலாந்தின் பாதிரியார் 1814 June 29 இலங்கையில் கால்பதித்த போது நிறுவப்பட்டதே வேம்படி மகளிர் கல்லூரி. இதனையே வேம்படி தனது நிறுவுனர் தினமாக கொண்டாடி வருகின்றது.

1816 இன்றைய யாழ் மத்திய கல்லூரி மண்டபம் இருக்கும் இடத்தில் ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1825 ஆம் ஆண்டிலே வேம்படியில் பெண்கல்வி ஆரம்பமாகிவிட்டது. மொத்தமாக 5 பெண்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் மட்டும் தமிழ்ப்பெண். பெண்களுக்கென ஒரு விடுதித் தமிழ் பாடசாலையை 'பேர்சிவல்' ஆரம்பித்தார். 06 துணிகரமான தமிழ்ப் பெண்கள் அதன் மாணவராக இருந்தனர். இம் மகளிர் விடுதிப் பாடசாலையே வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையாக வளர்ச்சி பெற்றது.

கலாநிதி பேர்சிவல், திருமதி பேர்சிவல் தொடக்கம் செல்வி மேரி பாக்கர் அம்மையார் வரை ஆளுமைப் பொலிவுடைய அதிபர்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாக தம் பணியை நிறைவேற்றினர்.

வேம்படியின் நட்சத்திர உதாரணங்கள் இன்றைய மாணவிகளுக்கும் வழிகாட்டியாக உள்ளனர். ஏன் வைத்தியத் துறையில் பட்டம் பெற்ற முதல் தமிழ் பெண் ஒரு வேம்படியாள் செல்வி நல்லம்மா வில்லியம் முருகேசு ஆவார்.

1942 பாடசாலை இலட்சினையை அமைத்த அன்றைய அதிபர் கூட்டுப் புழுவில் இருந்து வெளிவரும் வண்ணத்துப் பூச்சியினை சித்தரித்து இருந்தார் எமது பிரதேசத்துக்குரிய பனைமரம் போல் உறுதியுடன், பிறர் சுகத்துக்காக பயந்து அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்படாது "சரியானதை துணிந்து செய்திடு" என்ற மகுடவாசகத்தையும் பாடசாலை கீதத்தினையும் வழங்கி உற்சாகமூட்டி வழிப்படுத்தியுள்ளனர். ஆங்கிலேய அஸ்தமனத்துக்கு பின் வேம்படியும் தேசிய அதிபர்களால் பொறுப்பேற்று வழிநடத்தி செல்லப்பட்டு வருகிறது. இவர்களுள் ஆங்கிலேயரால் வளர்த்தெடுக்கப்பட்ட செல்வி மேபிள்

தம்பையா அவர்களின் சகாப்தம் வேம்படியில் பெண் கல்வியின் இன்றைய விரிவான விருத்திக்கு அடிநாதமாக அமைந்திருக்கிறது. இவர் தனது 30 ஆண்டுகளில் 500 மாணவருடன் கையேற்று 2300 மாணவர்களுடன் ஒரு முதல்தர பாடசாலையாக ஆக்கி வேம்படியை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். "நவீன வேம்படியின் சிற்பி" எனவும் "பொற்காலம்" எனவும் அவர் காலம் குறிப்பிடுகின்றது.



பின் இவ்வாறாக கண்டிப்பும் அன்பும் கட்டுப்பாடும் கொண்ட சிறந்த வழிநடத்தல்களின் கீழ் வளர்ச்சி பெற்று வந்த வேம்படியாள் திருமதி க. பொன்னம்பலத்தின் அயராத முயற்சியின் கீழ் மீண்டும் வலுப்பெற்று அதி உச்ச வளர்ச்சியை வேம்படி பெற்றுக் கொண்டது. பின்னர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் அதிபரின் கரங்களில் வேம்படியாள் தவள்கின்றாள. கல்வி மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கரை தட்டும் வேம்படியாள் உலகிலே தனக்கென ஒரு தனி இடத்தைக் கொண்டிருக்கின்றது.

இவற்றுடன் அர்ப்பண மனப்பாங்கான ஆசிரியர்கள் சிறந்த எம் சகோதரிகள் அக்கறையுடைய பெற்றோர், விசுவாசம் உள்ள பழைய மாணவர்கள், கரிசனையுடைய நலன்விரும்பிகள் ஆகியோர் பேர்சிவல் பெருந்தொகை வளர்த்த நன்னெறியில் வேம்படியை வழிநடத்திச் செல்கின்றனர். கலங்கரை விளக்கமாக திகழும் வேம்படியாளின் பணி மேலும் சிறக்க எமது வாழ்த்துக்கள்.

*******

**P. டினோஜா - 2016** கலை பிரிவு
ஊடகவியல்துறை
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை




**பத்து வித்தியாசங்கள்**

# மகுடத்து அரசி

18ம் நூற்றாண்டில் பனித்துளி நீர போல

கானகத்தில் வந்த நீர்! இன்று

பராக்கிரம சமுத்திரம் போல

பரிணாமம் அடைந்து விட்டது.

இங்கிலாந்துக்கு அடுத்ததாக

இந்து சமுத்திரத்தின் முத்தான

இலங்கை தேசத்தில் தோன்றிய

மகளிர் பாடசாலை

பீற்றா பேர்சிவலால் வீறு கொண்டு

எழுந்த வேம்படித் தாய்

வேரூன்றி விட்டாள் விண் தொடுமளவு

விசையொடு வித்தகர்தமை உருவாக்கிய தாய்

ஆரம்பத்தில் ஐந்து மாணவியர்

இன்றோ அவர் தொகை பன்மடங்காகி

இரண்டாயிரத்தையும் எட்டியதாக

எழில்தகு சாதனைப் பெண்களை உருவாக்கிய தாயிவள்

பாரதி கனவும் பேர்சிவலின் உழைப்பும்

பாரினில் உயர்புறு பெண்களைப் படைத்து

சரியதை செய் எனும் மகுடம் மூலம்

மகுடம் சூடிய அரசியிவள்

ஆண்டுகள் கடந்தாலும் இளமையாய்

இருக்கும் வேம்படித் தாயே

இன்னும் சாதனையாளரை உருவாக்கி

இன்னும் பல நூற்றாண்டுகள் நூதனமாய் வாழ.

மெ.புவஸ்ரினா - கலைப்பிரிவு
ஊடகவியல் மாணவி
யா/வேம்படி மகளிர்உயர்தர பாடசாலை

# பூகோளமயமாக்கல் (GLOBALIZATIONAL)



பூகோள ரீதியில் தொலைவு எனும் நிலையையும் தாண்டி சமூகரீதியாக உலகம் அண்மித்துச் செயற்படுத்தல் "பூகோள மயமாக்கல்" எனப்படும். மொழிரீதியான அடிப்படையில் உலக மயமாக்கல் பூமிமயமாக்கல், அகிலமயமாக்கல், சர்வதேச மயமாக்கல் எனப் பொருள்படும். பூகோள மயமாக்கத்தை ஒரு மானிட சமூகப் பரிமாற்றத்தின் ஒரு கட்டம், புதிய வம்சம், புதிய கட்டமைப்பு என பல்துறை சார்ந்ததாக பகுப்பாய்வு செய்து கொள்ள முடியும். பூகோள மயமாக்கல் பலநோக்கங்களின் அடிப்படையில் பார்க்கப்படுகின்றது. அதாவது வளர்ந்து வரும் நாடுகளுக்கு அதிகரித்த வாழ்க்கைத் தரத்தையும் வளத்தையும் கொண்டு வருகிறது. என்பதும் 1ம் உலக நாடுகளினதும் 3ம் உலக நாடுகளினதும் நிதிவளத்தை பெருக்க உதவுகின்றது என்பதும் ஒருவகையான நோக்கு, பொருளியல், சூழல், சமூகம் அடிப்படையில் விரும்பத்தக்கதாக அமைதல் ஒருவகையான நோக்கு, பண்பாடு பேரரசவாதம் (Cultural imperialism) ஊடான பண்பாட்டு கலப்புக்கு வழிவகுத்தல் என இப்படி நோக்கங்களை வைத்து பூகோளமயமாக்கல் பல்வேறு கோணங்களில் நோக்கப்படுகின்றது.

இது மட்டுமல்லாது பூகோளமயமாக்கலின் காரணமாக பல்வேறு கலாசாரத்துக்கு உரித்தான அறிவு மற்றும் தொழில் நுட்பத்தின் பாவிப்பு என்பவற்றை உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் பயன்படுத்தல் ஆகும். அது மட்டுமல்லாது இதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொதுக்கோட்பாடு இல்லையென்றாலும் மனித சமூகத்தின் பல்வேறு இயல்புகளுக்கு இடையில்லான பரஸ்பர ஆளிடைத் தொடர்பாடல் மற்றும் ஆளிடைச் செயல்பாட்டின் ஓர் பெறுபேறாக அமைகின்றது.

"பண்பாட்டு பூகோளமயமாக்கல்" எனப் பார்க்கும் போது நாடுகளுக்கிடையிலான பண்பாடுகளிடையே ஓர் வலைப் பின்னலை ஏற்படுத்தி, பண்பாடுகளிடையே தொடர்புகளை

அதிகரித்து சமூகங்களையும் பண்பாட்டையும் ஒன்றாகப் புகுத்தி நவீனத்துவத்தின் தாக்கத்தோடு செயற்படுத்தலாகும். இதன் மூலம் உலகத்தரத்தில் பொழுதுபோக்கு வாய்ப்புக்கள் அதிகரித்ததோடு மட்டுமல்லாது இணையம், செய்மதித் தொலைக்காட்சி போன்றவற்றின் பாவனையும் அதிகரித்துள்ளது. இதன் மூலம் விளங்கிக் கொள்வது யாதெனில் உலகம் சுருங்கி மக்களின் உள்ளங்கைக்குள் வந்து விட்டது என்தாகும். பூகோளமயமாக்கலினால் ஏற்படும் நன்மைகளாவன சுற்றாடல் துறை அபிவிருத்தியடைதல் புதிய கலாச்சாரங்கள் தொடர்பான அறிவுப் பரிமாறல்கள், தொழிற்சந்தை விரிவடைதலும் புதிய தொழில் வாய்ப்புக்கள் வருவதாலும் மக்கள் மத்தியில் தொழில் நுட்ப அறிவு விருத்தியடைதல், சர்வதேச வர்த்தகம் வினைத்திறன் கொண்டதாக மாறுதல். அபிவிருத்தி முன்னேற்றமடைதல். சமுதாயம் அறிவினையும் நவீனத்துவத்தையும் தேடிச் செல்லும் சமுதாயமாக மாறுதல் நல்லதைப்போல் இதன் மூலம் பல தீமைகளும் காணப்படுகின்றன. அதாவது உற்பத்தி மற்றும் வளப்பயன்பாடு அதிகரித்தல் சூழல் பிரச்சினை, நோய்கள் பரவுதல், கலாச்சாரச்சீரழிவு, போதைப்பொருள் பாவனை, பலமான கலாச்சாரங்கள் மேம்படல் ஏனைய கலாச்சாரங்கள் இழிவாக்கப்படுதல், இணையப்பாவனை அதிகரிப்பால் பல சீரழிவுகள் ஏற்படும் எனப் பலவற்றைக் கூறிக்கொள்ளலாம். என்னதான் நன்மைகள், தீமைகள் காணப்பட்டாலும் பூகோளமயமாக்கலில் பல நவீன நோக்குகளும் இடம் பெறுகின்றன.

அதாவது தேசிய அரசுகள் நலிவடைதல், பண்டப் பொருளாதாரத்தை மிஞ்சி நிதிப்பொருளாதாரம் பலமடைதல், வெகுஜன ஊடகங்களின் அளவுரீதியான அதிகரிப்பு நிகழ்தல். பல்வேறு ஊடகங்கள் ஒன்றிணைந்த தொகுதியாக மாறுதல். புதிய கலாச்சார வடிவங்கள் உருவாகுதல். கலப்புக் கலாசாரம் உருவாதல் எனப் பல உள்ளன. இப்படிப் பூகோளமயமாக்கல் விரிவடைந்தே செல்கின்றது, இது இவ்வாறு வளர்ச்சிப்போக்கில் செல்வதனால் பல மாற்றங்கள் எற்படுவதோடு உலகம் ஒரு புதிய பாதையில் பரிணமிக்கின்றது.

சிந்துஜா – ஊடகவியல் மாணவி
யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# பணிவு நயம்

இந்த பூமியின் ஜீவராசிகளின் மிகுந்த கொடையான, அதிஷ்டமான உயிரினம் மனித இனம். மனிதன் சிறந்த பல பண்புகள், விழுமியங்களை மகிமைப்படுத்தி நிற்கின்றன. அந்த வகையில் மனிதரில் சிறப்புடைப் பண்பாக மேலோங்கி நிற்பது பணிவு தான் என்றால் அது மிகையாகாது. இதனையே வள்ளுவர்,

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து"

அதாவது பெருமைக்குணம் உடையவர்கள் செருக்கின்றி என்றும் பணிந்து ஒழுகுவார்கள். சிறுமைக்குணம் உடையவர்கள் பெருமைகள் எதுவும் இல்லாத இடத்தும் தம்மை பெருமைப்படுத்தி வியந்து பேசுவர் என்று கூறுகின்றார்.

பணிவுடைமை சிறந்த மக்கட் பண்பாகும். அந்த உயர்ந்த மக்களுக்குரிய பண்பு இல்லாவிட்டால் எவ்வளவு அறிவுடையவர்களாக இருந்தாலும் கூட அவர்கள் "உணர்வற்ற மரத்திற்கே சமனாவர்" என வள்ளுவர் கூறுகிறார். எடுத்துக்காட்டாக

"அரம் போலுங் கூர்மைய ரேனும்
மரம் போல்வர் மக்கட்டி பண்பில்லாதவர்" என்ற குறளைக் கூறலாம்.

பணிவுடைமை மானிட விழுமியங்களில் எல்லோராலும் விரும்பப்படுகின்ற, போற்றப்படுகின்ற ஒரு நற்பண்பாகும். மனிதர்களுக்கு மட்டுமல்ல கடவுளுக்குமே மிகப் பிரியமானது அன்பு, பண்பு, பணிவு, அடக்கம் ஆகும். பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்ட வார்த்தையானது, "பெருமை உள்ளவர்களை எதிர்த்து நிற்கிறேன் தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை உள்ள தேவனாய் இருக்கிறேன்". என்ற வாக்குப்படி பணிவுடையவர்கள் மீது இறைவனே கிருபையாய் இருக்கிறார். என்றால் பணிவினை விட மேலான பண்பு வேறுண்டோ எனக் கூறலாம்.

பணிவுடையோர்களை இந்த உலகம் எப்பவுமே உயர்த்தும் பணிவுடையவர்களினால் தான் இன்றும் இந்த உலகம் வாழுகின்றது. பணிவுடையவர்களை சான்றோர்கள் எப்போதும் போற்றிப் பணிவார்கள். பெருமையற்றவர்களாக எப்பொழுதும் பணிவுடையவர்களாக வாழ்வது தான் பெருமை ஆகும். இதனையே வள்ளுவர்,
"பெருமை பெருமிதமின்மை "................................. " என்ற அடிகளிலே விளக்குகிறார்.

மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் பெருமை பாராட்டாது எல்லோரையும் மதிக்கவும், எப்பொழுதும் தாழ்மை உடையவர்களாகவும் வாழ்வோமானால் மனிதம் வாழும் மானிடம் தழைக்கும். ஆகையால் நாம் எல்லோரும் பணிவுடையவர்களாக என்றும் வாழ்ந்து இறைவனிடத்தில் இரக்கத்தையும், மனித மனங்களை வெல்லும் இயல்புகளை கொண்டவராக வாழ்வோமாக.. மனிதத்தின் வெற்றி பணிவுநயம் தான் என்றால் அது மிகையன்று.

ஆருணியா அருள்நேசன் - A/L 2016
ஊடகவியல் மாணவி
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

# பெண்களாலும் முடியும்!




இன்றைய காலகட்டங்களில் மாறி வரும் நவீன சமுதாயத்திற்கேற்ப பெண்களும் ஓர் முக்கிய காரணிகளாக விளங்குகின்றனர். பெண்களாலேயே பல உயிர்கள் தோற்றம் பெற்றது. பெண்ணானவள் இல்லையெனில் இவ்வுலகில் ஓர் அணுவும் அசையாது என்றே கூற வேண்டும். இவ்வகையில் தனிச் சிறப்பு வாய்ந்தவர்களாகவே பெண்கள் காணப்படுகின்றனர். அதனிலும் தாய்மைச் சிறப்பு பெண்களுக்கே உரித்தான ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் வீரம், கற்பு, பொறுமை, சிந்தனைத் திறமை போன்ற பல் வகைத் தன்மைகளைக் கொண்ட பெண்மையின் தற்கால நிலமையும் ஆரம்ப கால நிலமையையும் அதனோடு அவர்கள் எதிர் கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள், வெற்றிகளை நோக்குமிடத்து

ஆரம்ப கால கட்டங்களில் பெண் குழந்தையொன்றை ஓர் தாய் பெற்று விட்டாள் என்றால் அதனைப் பாவச் செயலாக எண்ணும் சமுதாயமே காணப்பட்டது. மேலும் கூற வேண்டுமெனில் " பெண்ணென்று பூமிதனிற் பிறந்து விட்டால் பெரும் பிழை இருக்குதடி தங்கமே தங்கம்" என்ற பாரதியாரின் கவி வரிகள் மூலம் புலப்படுத்தப்படுகிறது. மேலும் இக்கால கட்டங்களில் பல்வேறு சித்திர வகைகள் மற்றும் கஷ்டங்களை பெண்கள் எதிர் நோக்குகின்றனர். பெண் குழந்தையொன்றை பிரசவித்தவுடன் தாய்ப்பாலிற்குப் பதிலாக கள்ளிப்பாலை கொடுத்து இறக்கச் செய்வது விதவைக் கொடுமை என்ற பெயரில் பெண்களை அடிமைப்படுத்தல், அவமானப்படுத்தல் அவளை அனைவரும் தவறான நோக்கில் பார்த்தல் அதாவது சுபநிகழ்வுகளில் பங்கு கொள்ள விடாது ஒதுக்கி வைத்தல் ஓர் மூலைக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் நிலை இது போன்ற செயல்களால் அவளை மனவேதனைக்குட்படுத்தல் மற்றும் பெண்கள் ஏட்டைத் தொடுவது கூட பாவம் என கல்வியுரிமை மறுக்கப்படல் உடன் கட்டை ஏறல், பாலியல் விவாகம் அதாவது சிறு வயதிலேயே திருமணம் செய்து வைத்தல் வரதட்சணைக் கொடுமைகள் போன்ற துர் செயல்கள் மூலம் பெண்கள் அடிமைகள் போல் நடத்தப்பட்டனர்.

ஆயினும் ஆரம்பத்தில் மதங்களும் சரி மொழிகளும் சரி பெண்களை உயர்வாக மதித்துள்ளனர் அதாவது பெண் கடவுள்களை உருவாக்கிப் போற்றியுள்ளனர். தாய்மொழி , தாய்நாடு என்று தாயாகக் காணும் மரபு நிலவியது. பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் சில பெண்கள் தம் அயராத முயற்சியால் முன்னேறியுள்ளனர். இவ்வகையில் ஒளவையார், காக்கை பாடினியார், பாரிமகளீர் போன்றோரை புலமையாற்றலால் உயர்ந்தவர்களாகக் கூறலாம்.

அக்காலகட்டங்களிலும் பலம் மிக்க பெண்கள் காணப்பட்டனர். உதாரணமாக ஜான்சிராணியைக் குறிப்பிடலாம். தன்

நகருக்காக பல வெள்ளைக்கார அந்நியர்களுடன் போராடி வீர மரணம் எய்திய வீரமங்கை மேலும் தன் கணவனுக்காக நீதி கேட்டு மதுரையையே தீக்கிரையாக்கிய கண்ணகி தன் கற்பில் களங்கம் என்றதும் உடனே தீக்குளித்த சீதை தன்னை சபை முன் வைத்து களங்கப்படுத்திய ஒரே ஒரு காரணத்திற்காக மகாபாரதத்தையே நிகழ்த்திய திரௌபதி இவ்வாறு பல வரலாற்றுச் சம்பவங்களினூடு பெண் திறமையை வெளிக் கொணர முடியும். அக் கால கட்டங்களில் ஆணாதிக்கம் நிலவிய போதும் சில மங்கைகளும் வலிமை மிக்கவர்களாகவே காணப்பட்டனர். என்பதற்கு இவைகள் சான்றாக விளங்குகின்றன. அக்கால கட்டத்தில் பெண்கள் வீடு, தன் உறவுகளின் வாழ்வு, சமுதாயம் என்ற ஒரு நிலைக்குள்ளேயே காணப்பட்டனர். ஆனால் தற்கால பெண்களோ எந்தவொரு அடிமைத்தனமும் இல்லாத இயல்போடு சுயாதீன வாழ்வை வாழ்கின்றனர். ஆரம்ப காலம் போல் இல்லாது கல்வி, தொழில் போன்ற அனைத்து விடயங்களிலும் முன்னேறி வருகின்றனர். அக்கால கட்ட பெண்களைப் போல் அல்லாது அதாவது அவர்களின் அனைத்து நடையுடை பாவனைகளும் முன்னேற்றமடைந்து வருகின்றன. மேலும் கூறவேண்டுமாயின் ஆண்களுக்கு சமமாக பெண்கள் மதிக்கப்படுகின்றனர்.

அக்காலங்களிலெல்லாம் பிற ஆடவருடன் உரையாடுவதற்கே பெரும் தடை விதிக்கப்பட்டிருந்தது. மீறி உரையாட வேண்டுமானால் தலையில் துணி அணிந்து அவர்களுக்கு பணிந்தே உரையாடலை மேற்கொள்ளலாம். ஆனால் தற்காலங்களிலோ அவ்நிலமை இல்லாது சோசலிசமாக பழகும் நிலைக்கு இக்கால சூழ்நிலை வாய்ப்பாக அமைந்துள்ளது.

மேலும் அக்கால பெண்களைப் போலன்றி இக்கால பெண்கள் பேச்சாற்றல் மிக்கவர்களாகவும், அநீதிக்கெதிராய் குரல் கொடுப்பவர்களாகவும், அனைத்து துறைகளிலும் முதல் நிலை வகிப்பவர்களாகவும், சவால்களை வெற்றிகரமாக எதிர் கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர். உதாரணமாக மசாலாவை எடுத்துக் கொண்டால் அண்மைக் காலமாக முஸ்லீம் பெண்களின் கல்வியுரிமை மறுக்கப்பட்டிருந்த வேளையில் பெண் கல்விக்காக குரல் கொடுத்தது. அனைவரது கவனத்தை தன் பக்கம் ஈர்த்து துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியும் தன் போராட்டத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு பெண்களையே பெருமைப்படுத்தியவர். இவரை பெண்ணுருமைக்காக போராடிய இன்னொரு பாரதி என்றே குறிப்பிட வேண்டும் இவ்வகையில் பல பெண்களும் தம் ஆற்றல் மூலம் சமுதாயத்தில் தமக்கென ஓர் இடத்தை பெற்ற வண்ணமே காணப்படுகின்றனர்.

ஆயினும் பெண்களின் முன்னேற்றத்திற்கு சில காரணிகள் தடையாக செயல்படுகின்றனர். எவ்வளவு தான் பெண்கள் நவநாகரிக மாற்றத்திற்கு உட்பட்டிருந்தாலும் பெண்களை பாதிப்படையச் செய்யும் செயல்களை நிகழ்த்துவதன் மூலம் அவர்களது மனதில் ஓர் அச்ச உணர்வை பதிய வைத்திருக்கும் நிலை காணப்படுகின்றது.

அதாவது முற்காலங்களை விட இக்காலத்திலேயே பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகம் இடம் பெறுகின்றன. அவையாவன அராபிய நாடுகளில் பெண்ணடிமை வியாபாரம் மற்றும் துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் சீனக் குடியரசியல் பெண் சிசுக்களிற்கு அழகுக்காக கால்களிற்கு இறுக்கக் கட்டுப்போடும் கொடுமை மற்றும் விவாகம் என்ற பெயரால் பெண்களை வெளிநாடுகளிற்கு கூட்டிச்

சென்று தவறான செயல்களில் ஈடுபடுத்தல் அவர்களும் சிறிதும் யோசனை இன்றி பெண் புத்தி பின் புத்தி என்ற கூற்றுக்கமைய உடன் செல்லல் தவறான காதல் தொடர்புகள் மூலம் அல்லல்படல் மேலும் இவற்றால் மனப்பாதிப்புற்று தற்கொலை முயற்சிகளை மேற்கொள்கின்றனர். பெண்கள் மேலும் அறியாமல் செய்த பிழைகளிற்கு தண்டனை அனுபவித்தல் இதற்கு சிறந்த உதாரணமாக நம் நாட்டு முஸ்லீம் பெண்ணையே குறிப்பிடலாம். தான் பணி புரியும் இடத்தில் அறியாமல் நிகழ்ந்த செயலிற்காக சிறுவயதில் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டமை அராபிய தேசமாகையால் வழியின்றி தன் உயிர் மாய்த்தாள். இச்செய்தி ஓர் சில நாட்கள் ஊடகங்களில் தொடராக வெளிவந்தவையென அறியலாம். மேலும் உன்னதமான மகளீர் தினம் அதாவது கி.பி 1889ம் ஆண்டுகளில் ஜெட்கின் என்ற வீராங்கனையால் பெண்களின் சம உரிமைக்காக குரல் கொடுத்து உருவாக்கப்பட்டது.

மேலும் பங்குனி 8ம் திகதி சர்வதேச மகளீர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு பெண்களுக்கே உரித்தான இத்தினத்தில் ஓர் கொடூர சம்பவம் அரங்கேறியமை அனைவரையும் திகைப்பிற்குள்ளாக்கியது. அதாவது தன்கணவருக்கு கூறாமல் வெளியில் சென்றதற்காக கணவன் தன் மனைவிக்கு பல சவுக்கடி கொடுத்தாராம். என அண்மையில் செய்தியொன்று பரவியது. பெண்கள் வியாபாரம் பொருளாகவும் விளம்பரப் பொருளாகவும் பார்க்கும் நிலை காணப்படுகின்றது. தொலைக்காட்சி மற்றும் சமூக வலைத்தளங்கள் பெண்ணைக் கேவலப்படுத்துகின்றன. குளிப்பாட்டியே பெண்களை அமுக்காக்குகின்றார்கள் தொலைக்காட்சி விளம்பரத்தில் எனும் கவிதை பெண்ணின் இன்றைய நிலையை தெளிவுபடுத்துகின்றது.

எனவே ஆரம்பகாலத்திலும் சரி இக்காலத்திலும் சரி பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிகழ்ந்த வண்ணமேயுள்ளது. முடிந்தளவு இவற்றிலிருந்து தப்புவதற்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளவும் துணிச்சல் மற்றும் தைரியம் கொண்டவர்களாகவும் பெண்கள் காணப்பட வேண்டும் இன்று உலகமே வியந்து நிற்க காரணம் தாம் பிரவேசித்த துறைகளால் பெண்கள் தம் ஆளுமையை காட்டுவது தான் வீட்டை நிர்வகிப்பதாலும் நாட்டை நிர்வகிப்பதாலும் பெண்ணானவள் ஆணுக்குச் சளைத்தவளல்ல என்பதை ஒவ்வொரு பெண்ணும் நிரூபிக்க வேண்டும். மேலும் பெண்களை தவறான பாதைகளில் இட்டுச் செல்லும் ஒவ்வொருவரும் சகல பெண்களும் தமது தாய் தங்கை என்ற உணர்வினை ஏற்படுத்திக் கொண்டால் எந்த வித பிரச்சினைகளும் உருவாகாது மரபு, கலாச்சாரம் என்ற பெயரால் கட்டப்பட்டிருந்த மூட நம்பிக்கைகளும் பெண்களின் எழுச்சியால் தகர்த்தப்பட்டுள்ளமையால் அநீதிகளை எதிர்க்கும் ஆயுதமாக பெண்களின் வளர்ச்சியில் கைகொடுப்போமாக.

- த.சினேகா -
கலைப்பிரிவு 2016
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

*தேவைக்கு மேலே பொருளும், திறமைக்கு மேலே புகழும்*
*கிடைத்துவிட்டால்*
*பார்வையில் படுவதெல்லாம் சாதாரணமாகத்தான் தோன்றும்!*
*கவிஞர் - கண்ணதாசன் -*

# முச்சந்தியில்



இலங்கையில் தனிமனிதர்களின் பாதுகாப்பிற்கு 100% உத்தரவாதம் உண்டா? என்றொரு கேள்வியை மேற்கத்தேய நாடு ஒன்றின் ஊடகவியலாளர் ஒருவர் அண்மையில் தென் இலங்கை அரசியல்வாதி ஒருவரிடம் கேட்டாராம் இதற்கு பதில் அளித்த குறித்த அரசியல்வாதி "நல்லாட்சியில் தனிமனிதர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது." என்றாராம் இதற்கு முச்சந்தியில் நின்ற ஒருவர் அப்படியென்றால் "நாட்டின் ஜனாதிபதியின் தம்பியின் பாதுகாப்பிற்கு என்ன நடந்தது" என்றாராம்.?

---

யாழ் குடாநாட்டில் சட்டம் ஒழுங்கு சீரக நடைமுறைப்படுத்துவதாக வெளிப்படையாக கூறப்படுகின்றது. சில விடயங்களில் அது சரியாகவும் உள்ளது. ஆனால் சட்டத்தை பேசுகிற இதை பாதுகாக்க வேண்டிய இந்தப்பிரிவைச் சேர்ந்த ஒருவரிடம் ஒரு இளம் தாய் அண்மையில் ஒரு விவாகரத்து வழக்கு விவகாரமாக சென்றாவாம் அப்போது அந்த சட்டத்தை பேசுற மனுஷன் புதிய பாணியில் வழமைக்கு மாறாக குறித்த பெண்ணிடம் பணம் வாங்குவதற்கு பதிலாக பணம் கொடுக்க முற்பட்டுள்ளார். இதை மறுத்த பெண் அவரது



அலுவலகத்தை விட்டு வெளியேற முற்பட்ட போது மனுஷன் கிழவன் கையை எட்டிபிடித்து இழுத்துப் பார்த்திருக்கிறார். அதற்கு அந்தப்பிள்ளையும் கூச்சப்படாமல் எடுத்த எடுப்பிலை காடுவைச்சுப் போட்டுது. இதுக்குப் பிறகு மனித உரிமை என்று சொல்லி வீடோ அல்லது இல்லமோ வச்சிருக்கிறவயிட்டையும் பிள்ளை முறையிட்டதாம் அவையும் மனம் இரங்கேல்லையாம் இப்ப அந்தப் பிள்ளைக்கு இடையிலை வேலை செய்யிறதற்கு தான் வேலை எடுத்துக் குடுத்தனான் என்று இந்த மனுஷன் சொல்லித்திரியுதாம் இதற்கு முச்சந்தியிலை நிண்ட கிழடு ஒன்டு சொல்லுது பாருங்கோ அந்த சம்பவம் நடந்த குறித்த மாநகரிற்கு பொறுப்பான மனுசனும் உந்த விசயங்களிலை கில்லாடி தானாம். அப்ப அவரைப்பார்த்து இவர் பழகினாரோ இவரைப் பார்த்து அவர் பழகினாரோ என்டு கிழடு ஆராய்ச்சியில் இறங்கிவிட்டுது. என்னண்டாப் பாருங்கோ மனுஷன் பிள்ளைகுட்டி இல்லாட்டிலும் சின்னப் பொடியன் மாதிரித்தான் 55 தாண்டினப்பிறகும் டை அடிச்சுக் கொண்டு திரியேக்கை யோசிச்சனான். என்று முச்சந்தியிலை இன்னும் கதை நிக்கேல்லை பாருங்கே?

---

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பதிவு விவகாரம் அடிக்கடி சூடு பிடிப்பது வழமையானது இந்த முறையும் இந்த விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. சம்மந்தன் ஐயாவும் ஊடகப் பேச்சாளர் சுரேஸ்பிரேமச்சந்திரனும் மாறி மாறி இந்த விசயத்திலை அறிக்கை விடத் தொடங்கி விட்டினம். இதற்கு முச்சந்தியிலை நிண்ட வயது போனது ஒன்டு சொல்லுது பாருங்கோ உந்த அறிக்கையும் சண்டையும் கனநாளாய் நடக்குதாம் ஆனால் யார்தான் தலையால நடந்தாலும் பதிவு என்று சொல்லி ஒன்று நடக்காதாம் இதுக்கு என்னோட பந்தயம் கட்ட ஆரேண்டாலும் வாறியளோ எண்டு கேட்டதற்கு எல்லோரும் முச்சந்தியிலை வாயடைச்சு நிக்கினம் பாருங்கோ அப்ப உண்மையிலை பதிவு ஒன்று நடக்காது இதை வெளிநாட்டிலையும் உறுதியாய்தானே எங்கடை மாவீர மாவையார் சொல்லிப்போட்டு வந்திட்டார்.




எங்கடை கூட்டமைப்பினர்
கிளிநொச்சி மாஸ்ர் அடிக்கடி வடமராட்சி
கிழக்கு பக்கம் போறாராம் அந்த
றோட்டாலை போய் வந்தால் உயிர்
போய்வரும் என்று எல்லா பாராளுமன்ற
உறுப்பினர்களும் சொல்லுகினம் ஆனால்
இந்த மனுஷன் அங்க போய் தன்ர
அலுவலகத்தையும் திறந்திட்டார் பாருங்கோ
இதற்கு முச்சந்தியிலை நிண்ட கம்பஸ்
பெடியன் ஒண்டு சொல்லிச்சு "பாருங்கோ
யார்தான் என்ன செய்தாலும் யார்தான் வந்து போனாலும் இந்த வீதியை பற்றி ஒருவரும் சிந்திக்கேல்லை
ஆனால் அரசியலுக்காகத்தான் எல்லாரும் வருகினம்" எண்டு அந்தப்பெடியன் சொல்லுறானுங்கோ
யோசிச்சுப் பார்த்துப்போட்டு அந்த வீதியால ஒருக்கால் போய் பார்த்தனானுங்கோ அந்தப் பெடியன்
சொன்னது சரிபோலத்தான் தெரியுதுங்கோ.

*****


- த.நெருப்பன் -


# மாறியோ கிறீம் கவுஸ்

# MAARIO Cream House



89, பருத்தித்துறை வீதி
நெல்லியடி, கரவெட்டி.




ஞாயிற்றுக்கிழமை 10% விலைக்கழிவு உண்டு

T.P : 0768373190

# முதல் 20 இணையத்தளங்கள்

உலகிலே அதிகமான எண்ணிக்கையில் பயனாளர்களைக் கொண்டுள்ள இணையத்தளம் எது? கண்களை மூடிக்கொண்டு கூகுள் (google தேடுதளம்) என்று சொல்லி விடுவீர்கள் இல்லையா?

அதுதான் இல்லை அண்மையில் எடுத்த கணக்கின்படி கூகுள் இணையத்தளம் இரண்டாவது இடத்தில் உள்ளது. அப்படியானால் முதல் இடத்தில் இருப்பது எது? என்ற கேள்வி உங்கள் மனதில் எழும்பலாம் இல்லையா? அதுவும் ஓர் அமெரிக்க தளம் தான். இங்கே இந்த வகையில் அதிக தனிநபர் சந்தாகாரர்களைக் கொண்டுள்ள முதல் இருபது இணையத்தளங்களை அதன் வகையுடனும், தன்மையுடனும் காணலாம். இறுதியில் மேலே உள்ள உங்கள் மனதில் எழுந்த கேள்விக்கான இணையத்தளத்தையும் காணலாம்.



## 20 :- Amazon.com:

எலக்ரானிக்ஸ் சாதனங்கள், உடைகள், விளையாட்டு சாதனங்கள் ஏன் உணவு கூட இங்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதன் தனிநபர் வாடிக்கையாளர் எண்ணிக்கை 16 கோடியே 30 இலட்சம் முதன் முதலில் இது தொடங்கிய போது பொருட்களைப் பெற்று பேக் செய்து அனுப்பும் பணியைத் தான் மேற்கொண்டதாக இருந்தது. தற்போது இதன் இமாலய வளர்ச்சி, இணைய வர்த்தகத்தின் சிறப்பினை காட்டுவதாக அமைந்துள்ளது.

## 19. Sina.com.cn:

மீடியா மற்றும் பயனாளர்கள் உருவாக்கும் தகவல்களைத் தாங்கித் தரும் சீனா நாட்டு இணையத்தளம், 2000 ஆண்டு வாக்கில், சீனாவின் yahoo தளம் என்றபெயரை இது பெற்றிருந்தது. 2009 இல் weibo என்ற பெயரில் வலையைத் தளம் ஒன்றையும் இது தொடங்கியது. இத் தளத்தில் 40 கோடி பயனாளர்கள் உள்ளனர். Sina.com தள சந்தாகாரர் எண்ணிக்கை 16 கோடியே 90 இலட்சம்.

## 18. Word-press.com:

17 கோடியே 9 இலட்சம் பேர் பயன்படுத்தும் வலைமைத் தளம் மிக எளிமையான வலைமனை சாதனங்களை இலவசமாக வழங்கி தன் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கையை இத்தளம் பெருகிக் கொண்டது.

## 17. Apple.com:

அப்பிள் சாதனங்கள் மற்றும் Programes அவற்றுக்கான Software களுக்கான தனிதளம். இவற்றை பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் எங்கள் சந்தேகங்களைப் போக்குவதற்கான தகவல்களைத் தரும் தளமும் கூட வாடிக்கையாளர் எண்ணிக்கை 17 கோடியே 17 இலட்சம்.

**16. Sohu.com!:**

சீன நாட்டில் இயங்கும் பல் நோக்கு இணையத்தளம் மற்றும் தேடல் தளம் 1997 ஆம் ஆண்டில் சீனாவின் முதல் ஆன்லைன் சர்ச் இஞ்சின் தளமாக இது தொடங்கப்பட்டது. தொடர்ந்து ஒரு பல்நோக்கு இணையத்தளமாகவும் ரியல்எஸ்டேட் இணையத்தளமாகவும் வளர்ந்து இன்று 17 கோடியே 58 இலட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது.

**15. Bing.com:**

Microsoft தன்னுடைய இந்தத் தளம் குறித்து தீவிரமான விளம்பரம் செய்தது. மிக எளிதாக தேடலையும் முடிவுகளையும் தரக் கூடிய தளமாக இதனைக் காட்டி முன்னுக்கு கொண்டுவர முயன்றது. அதற்கேற்ற வகையில் நவீன தொழில் நுட்பத்தினையும் இணைத்தது. இதன் வாடிக்கையாளர் எண்ணிக்கை 18 கோடியே 40 இலட்சம்.

**14. Twitter.com:**

Real time தொலைத் தொடர்பினைத் தரும் இணையத்தளம் 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நாள் முதல் உலகெங்கும் நடக்கும் நிகழ்வுகளை அறிந்து கொள்ள மக்கள் அணுகும் ஓர் இணையத்தளமாக உருவெடுத்துள்ளது. அதற்கேற்ற வகையில் பல நிறுவனங்கள் அரசியல்வாதிகள் மக்கள் தலைவர்கள் ஊடாக நிறுவனங்கள் தொழில் முனைவர்கள் ஆகியோர் இதில் தகவல்களைத் தருகின்றனர். இதன் சந்தாகாரர் எண்ணிக்கை18 கோடியே 98 இலட்சம்.

**13. Taobao.com:**

20 கோடியே 70 இலட்சம் சந்தாகாரர்களைக் கொண்டது. eBay.amazon போல மிகப் பெரிய வர்த்தகர் இணையத்தளம். இதன் உரிமையாளரான alibaba.com இதனை எந்தக் கட்டணமும் இல்லாத தளமாகக் கொண்டு வந்த நாள் முதல் இது தொடர்ந்து பெரிய அளவில் வர்த்தகம் மேற்கொள்ளும் தளமாக உள்ளது.

**12. Ask.com:**

21 கோடியே 84 இலட்சம் பேர் இதன் வாடிக்கையாளர்கள். google இதன் பின்னனியில் உள்ளது. இது முதலில் தொடங்கும் போது Askjeeves.com என இருந்தது. பின்னர் மாற்றங்களை அடைந்தது.

**11. Blogger.com:**

மிகச்சிறிய நிறுவனமாகத் தொடங்கப்பட்ட இந் நிறுவனம் இணையத்தளங்கள் சரிவைச் சந்தித்தபோது தள்ளாடியது பின்னர் 2002 இல் google இனை மேற்கொண்டு தற்போது உயரக் கொண்டு வந்துள்ளது. வலைமனை அமைப்பாளர்கள் அதிகம் நாடும் தளம் இதுதான். 22 கோடியே 99 இலட்சம் பேர் இதன் வாடிக்கையாளர்கள்.

**10. Msn.com:**

Microsoft நிறுவனம் கொண்டுள்ள இணைய வசதிகளில் இதுவும் ஒன்று. இணைய சேவை நிறுவனமாகத் தொடங்கப்பட்டு hotmail/MSN மெசஞ்சர்ஆகியவற்றை கொண்டுள்ளது. போர்டல் தளமாக இயங்குகின்றது. இதன் வாடிக்யைாளர் எண்ணிக்கை 25 கோடியே 41 லட்சம்.

**09. Baidu.com:**

Website.video audio files Image ஆகியவற்றைத் தேடி பெற சீனா கொண்டுள்ள இணையத்தளம் இது ஆயிரக் கணக்கான சீனப் பொறியியலாளர்கள்தொடர்ந்து இதன் தகவல்களை update செய்து வருகின்றனர். இதன் வாடிக்கையாளர் எண்ணிக்கை 26 கோடியே 87 இலட்சம்.

**08. Microsoft.com:**

Computer பயன்படுத்தும் அனைவரும் அறிந்த தளம் இதன் வாடிக்கையாளர் எண்ணிக்கை 27 கோடியே 17 லட்சம்.

**07. Q.Q,.com:**

சீனாவில் இயங்கும் தேடல் இணையத்தளம் மற்றும் தகவல் களஞ்சிய தளம் இதனை உருவாக்கியது Tancent என்ற சீன நிறுவனம் இன்ஸ்டன்ட் மெசேறஜ் சேவையில் இது சீனாவில் முதல் நிலைத் தளமாக உள்ளது. இந்த வகையில் 70 கோடி பேர் தனது வாடிக்கையாளர் என இத் தளம் குறிப்பிட்டுள்ளது. Qzone and time Tancent weibo blog என இதனுடைய இரண்டு தளங்களும் சீனாவில் புகழ் பெற்றவை. இந்தத் தளத்தில் வாடிக்கையாளர்கள் 28 கோடியே 41 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**06. Live.com:**

Microsoft நிறுவனத்தின் புதிய E - mail தளம் outlook மற்றும் hotmail தளங்களை ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டது. இதன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 38 கோடியே 95 லட்சம்.

**05. Wikipidia.org:**

46 கோடியே 96 இலட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்டது. இலவசக் கலைக்களஞ்சியமாக இயங்கி வருகிறது. யார் வேண்டுமானாலும் இதில் தகவல்களை ஏற்றலாம். இருப்பவற்றை Edit செய்திடலாம். இந்த தளத்திற்கு அதிகம் வருபவர்கள் google தளத்தை தேடுபவர்களாகவே உள்ளனர்.

**04. Yahoo.com:**

இணைய பல்நோக்கு தளங்களில் முன்னோடியானது இந்தக் தளம். தேடல் சாதனமாகவும் இணைய போர்ட்டல் தளமாகவும் செயல்படுகின்றது. இதன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 46 கோடியே 99 இலட்சம்.

**03. Youtube.com:**

பயனாளிகள் உருவாக்கிய வீடியோ காட்சிகளைப் பகிர்ந்து கொள்ள, பார்த்து ரசிக்க இது ஓர் அருமையான தளமாகப் பல்லாண்டுகள் இயங்கி வருகிறது. 2006ல் இதனை google நிறுவனம் தனதாக்கி கொண்டு தொடர்ந்து பல வசதிகளை அளித்து விடுகிறது. இதன் தனிநபர் சந்தாதாரர்கள் எண்ணிக்கை 72 கோடியே 19 இலட்சம்.

**02. Google.com:**

78 கோடியே 28 லட்சம் பேரைத் தன் வாடிக்கையாளராகக் கொண்ட இந்தத் தேடுதளம். இவ் வகையில் இன்று உலகின் முதல் இடம்பெற்ற தளமாக உள்ளது. Gmail/ Google Drive, google mail என இணையத்தில் இயங்கும் அனைவரையும் ஏதாவது ஒரு வகையில் இழுத்துப் போட்டு வைத்துக் கொள்கின்றது.

## 01. FACEBOOK.COM:

இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் கேட்ட கேள்விக்கான பதில் இங்கே உள்ளது. ஆம் வாசகர்களுக்கான சமூக வலைத்தளம் (Face book) தான் உலகிலேயே மிக அதிகமான எண்ணிக்கையில் தனிநபர் வாடிக்கையாளர்களைக் கொண்ட இணையதளமாக இயங்கி வருகின்றது. இந்த சமூக இணையத்தளத்தின் மூலம் உங்கள் நண்பர்கள் அனைவரையும் உடனுக்குடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளலாம். முதன் முதலில் ஹார்ட்வேர்ட் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமே எனத் தொடங்கப்பட்ட இந்த சமூகத் தளம் இன்று உலகின் அனைத்து நாடுகளிலிருந்தும் நண்பர்களைக் கொண்ட தளமாக இயங்குகிறது.

பா.நிறோஷன் - **ACS** கணணிக் கல்வி நிலையம்

# கவி முழக்கம்

## எழுக என்தோழி!

நினைவோடம் ஏறி நினைவு நதி நீந்தி
பல தொலைவு சென்று
பார்ப்போமா என்தோழி?
நாம் இன்னும் காணா நகர்கள்... மலை கடல்கள்
ஏராளம் உண்டு இணைந்தெழுவாய்
என்தோழி!
வானக் கடலில் விண்மீன் பிடி
ஆமாம் திமிங்கல நிலவு
தேய்ந்து தேய்ந்து
ஓர்படகாய் எமைஏற்றி ஓ
கனவுகளின்
வலையெறிவேன் நான்;
நீயோ துடுப்பை இறுக்கிவ
வலை நீ எறிவதிலே வல்
துடுப்பைத்தா...
யார்வலை வீசி என்ன
எவ்வளவு அதிகம்
விண்மீன் பிடிபடுமோ அதுவே நம் வெற்றியடி!
இந்த நிலவோடந் தன்னை
முழுதாக



நம்ப முடியாது
நாளையும் இது தேயும்
நாளை மறுநாளோ நலியும்...மிக
எனவே
இன்றே எழுக;
ன்கையை கோர்த்திடுக!
றோ...நொருங்கிவிட்ட
கண்ணாடிக் குடுவை...அதை
மீட்டெடுக்க முடியாது!
நாளை ...மாயை...
இன்றே இக் கணத்தினிலே
விரும்பியதை அடையவேண்டும்!
விடு... 'உசார்மருந்து'
தெனிலும்
எழும்பு!
நிலவோடம் ஏறி
நினைவு நதிநீந்தி
பலதொலைவு சென்றிடலாம்
பயமில்லை..நீ...கிளம்பு!

கவிஞர்
இ.த.ஜெயசீலன்
பிரதேச செயலர்-பருத்தித்துறை.

## மடிந்து போகின்றேன் பேரழகியே

என்னை ஒருத்திக்காய் தொலைத்திருந்தேன்.
ஏமாற்றங்கள் பல கண்டு வருந்தியிருந்தேன்

அன்பை ஆழமாய் பதித்திருந்தேன்
அவளையே எனக்குள்ளே சேர்த்திருந்தேன்


பகலிரவு கூட அவள் நினைவு
பாய்விரித்து துயில் கொண்டால் அவள் கனவு.

பாட்டுக்குப்பாட்டு வைத்த நினைவுகள்
பள்ளியில் கண்ட குதூகல பொழுதுகள்

உன் அம்புகள் எனை எய்தமையால்
மீள முடியாமல் துடிக்கிறேன்

மடிதராத உன் நினைவோடு
மடிந்து போகிறேன் பேரழிகியே!

- வே.வே.அகிலேஸ்வரன் -
மருதங்கேணி




# (அ)நாகரீக உலகம் (சிலருக்கு மட்டும்)

கையெடுத்து வணங்கும் படியான பெண்களும்
கை வைக்க பிறரை தூண்டும் பெண்களும்
இவ் வையகத்தில் தான் உள்ளார்களடா

முழு உடலையும் மறைப்பதற்கு சேலை
அணிந்தார்கள் பெண்கள் அந்நாளில்
முழு உடலையும் ஜன்னல் வைத்து காட்ட - சேலை
அணிகின்றார்கள் பெண்கள் இந்நாளில்


உனது செயற்பாடு ஆடை அணிகலன்களால்
பருவமங்கை நீ ஆடவனுக்கு போதை
ஏற்றிவிட்டு மறைகிறாய்
பருவமடையாத பிஞ்சுப் பாலகன் மீது -தனது
போதையை தீர்த்துக் கொள்கின்றான் ஆண்

காதலிக்கும் போது காதலனின் பசிக்கு
இடம் கொடுக்கிறாள் கன்னி
கல்யாணத்தின் பின்
பல பெண்களின்
வாழ்க்கையை சீர்குலைக்கி[illegible]



கணவன் மட்டும் பார்க[illegible]
கணவனுடன் செல்லு[illegible]
மற்ற ஆடவர் பார்க்[illegible] அணிகிறாள்.
இதை கண்டும் [illegible]
அழைத்துச் செ[illegible] கணவன்
இவனை கண[illegible]
மாமா என்பதா?

பொன் பொருளை [illegible]
காலம் மாறி
பெண் கற்பை சீதன[illegible]
காலம் வந்துவிட்டது.



பெண்ணடிமை கண்டு அந்நாளில்
பாரதிக்கு மீசை துடித்தது
பெண் அநாகரிகம் கண்டு - இந்நாளில்
பல ஆண்களிற்கு ஆசை துடிக்கிறது.

பார்ப்பவரெல்லாம் கணக்கிடும்
காட்சிப் பொருளல்ல பெண்ணே நீ
பாரதி கண்ட புதுமைப் பெண் நீ.

பெண்ணே!
இதற்கு காரணம் நீதான்
உலகிற்காக வாழாதே
உனக்காக வாழ்ந்துபார்
உலகம் உன்னை
தேவன் மகளாக பார்க்கும்.

- சு.டர்சிகா -

# இன்றும்

கனவை கானலாக்குவது போல
பெண்ணுக்கு என்ன கல்வி எனும்
இழக்காரப் பேச்சு இன்றும்
படித்தது போதும் எனக்கூறும் பெற்றோர்
ஒரு புறம்
பெண்களுக்கு அதிகம் படிப்பு தேவையில்லை,
படித்தது போதும் மணம் முடித்துகொடு
எனக்கூறும் சமுதாயம்
மறுபுறம்
பாரதியின் கனவு புதைக்கப்படுகின்றது.
பாலகியின் கனவு கானல் நீராகின்றது.

மெ.புவஸ்ரினா - ஊடகவியல் மாணவி
கலைப்பிரிவு

## சுடுகின்ற நிலாக்காலம்

முற்றத்து வெளியில்
முன்னிரவு வரையில்
நித்தமும் கதை சொன்ன
நிலாக்காலம் மறந்தாயா.

மின்கம்ப விளக்கில் நீ
கண் வீங்கி படிக்கையில்
என் வீட்டு ஒளி தந்தேன்
வைத்த நேசம்
அணைத்தாயா


பேரும் புகழும் தொட்டே
நீ போகும் பாதை
போலியே
மனப்போதை
தெளிந்து விட்டால்
அடி நெஞ்சு வேகும்
தோழியே

நிழல்போல நினைக்க
வைத்து
நிறம் மாறி சுட்டவளே......

இலையுதிர்க்காலம் போல
நினைவுதிர்த்து
நிற்பவனே............

- ந.நளாயினி -

## என் உறவு நீயம்மா.........



உயிருடன் உடல் தந்து
உதிரத்தைப் பாலாக்கி உணவு [illegible]
உண்ணாமல் தவமிருந்து - உடலை
வருத்தி உறக்கத்தை ஒதுக்கி - உன்னையே
என்னையாய் செதுக்கிய என் அன்னை நீ என்
உயிர் உறவம்மா

என்னை உன்னோடு இறைவன் ஒரு
கொடியில் இணைத்ததால் தான் - என்
உறவும் சேர்ந்து உன்னோடு
இருக்குதம்மா.

- சி.வேந்தன் -

## சுவடுகள்



வாழ்க்கையின்
ஒவ்வொரு சவால்களும்
பல
நெருக்கடிகளை
காண்பிக்கும்
நீ......
வெல்வதும்
தோற்பதும்
உனது முயற்சியின்
பலனும் பலாபலனுமே.............!

- கவிஞர் த.கங்கை ஆத்மன் -

# காதலின் உணர்வுகள்



நிறைந்து கிடக்கும் நிறங்களை
வேண்டாமென்றே நிழலிடையே பயணிக்கிறது காதல்
உயிராக உலரும் உணர்வுகளை வேண்டுமென்றே
உறங்கச் சொல்லி நம்மிடையே நடைபோடுகிறது
சில உணர்வுகள்......!!!
சாரலாய் வீசும் தென்றலில்
நூலிழையில் நுழைந்த மின்னுணர்வுகளை
உண்டாக்கிறது
சில உரசல்கள்
நிழலை நனைக்கத் தெரியாத நதியில்
மிதக்கத் தெரிந்த பறவையாய் பயணிக்கும்
நாங்கள்
காதலர்கள்.....!!!
இதுவே காதலின் உணர்வுகள்!!
இதுதான் காதலின் உணர்வுகள்!!


- பா.நிரோஷ் -

# பிரியமான நட்பு

மின்னலிலே பேரொளியாய்
மிளிர்ந்திடும் மெல்லிசையாய்
மிகுதியாய் வந்தவனே
என் கவியின் முதற் பொருளாய்
காலமெலாம் வருபவனே
பாரினிலே நானெடுத்த
முதல் முத்தானவனே
காற்றோடு பேசிடும்
கலையாத வண்ணமாய்
என்றென்றும் என்
பிரியமான நட்பு

- ப.அகல்யா -
உடுத்துறை

# குழந்தை மொழி




தேவைகளின் காரணத்தை
வார்த்தைகளால் மொழி
பெயர்க்க தெரியாத
குழந்தை மெல்ல
கை நீட்டி அழும்
இன்று இதற்க தெரிந்த
தாய் மொழி
இந்த கைநீட்டல்
மட்டுமே..................

- த.ஜெனித்தா -
ஊடகவியல் மாணவி

# சாதனை வீரன்

## செந்தூரன்



14வது சர்வதேச தரத்தில் நடாத்தப்பட்ட சோட்டோகான் (I.S.K) கராத்தே சுற்றுப்போட்டி 21-02-2015 அன்று கண்டிபேராதனை பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் Brown Belt (மண்ணிறப்பட்டி) பட்டியலில் விளையாடி பருத்தித்துறையைச் சேர்ந்த நாராயணமூர்த்தி செந்தூரன் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டார். இந்த சாதனை வீரன் பருத்தித்துறை தற்காப்பு கராத்தே கலையகத்தைச் சேர்ந்த இரட்ணசோதி ஆசானின் மாணவன் ஆவார் என்பதுடன் கடந்த ஆண்டு நடைபெற்ற 13வது சுற்றுப்போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார். மேலும் இந்த சாதனை வீரன் 2014ம் ஆண்டு குத்துச்சண்டை (பொக்ஸிங்) போட்டியில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை பெற்றதுடன் 2001ம் ஆண்டுக்கு பின்னர் வடமாகாணத்துக்கு வெள்ளபதக்கத்தை பெற்று தந்ததுடன் தான் பிறந்து வளர்ந்த வீரம் செறிந்த வடமராட்சியின் பருத்தித்துறை மண்ணுக்கும் பெருமை சேர்த்து தந்துள்ளார். இந்த வீரன் தொடர்ந்தும் பல சாதனைகள் படைக்க யாழ் முழக்கம் சஞ்சிகை தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

■ சி.வேந்தன்

---

### பங்குனி மாத இதழின்

| கட்டுரைப் போட்டி வெற்றியாளர்கள் | கவிதைப் போட்டி வெற்றியாளர்கள் |
|---|---|
| 1ம் இடம் : அ.அனுசியா - கிளிநொச்சி | 1ம் இடம் : த.விசாகர் - மன்னார் |
| 2ம் இடம் : யோ.லான்சன் - கொழும்புத்துறை | 2ம் இடம் : யோ.வர்ண - யாழ்ப்பாணம் |
| 3ம் இடம் : வே.நிபோயினி - யாழ்ப்பாணம் | 3ம் இடம் : க.விதுரா - பருத்தித்துறை |

# நகைச்சுவைத் துணுக்குகள்



ஆண் : காதல் வந்தால் சொல்லி அனுப்பு
பெண் : வரலன்னா?
ஆண் : எஸ், எம். எஸ்ல உன் தங்கச்சிட நம்பர அனுப்பு

உங்களுக்கு (B) போரடிச்சா உடனே
பூவா தலையா போட்டுப் பாருங்க
பூ விழுந்தா மல்லாக்கா படுத்து தூங்குங்க
தலை விழுந்தா குப்புறபடுத்து தூங்குங்க.



கண்ணே ரோஜா
உன் காலில் என்ன கொலுசா
என் மனம் வலிக்குதே லேசா
நாம ஓடிப்போலாமா நைஸா

நாய் கடிக்க முதலில் என்ன செய்யனும்?
முதலில் நாய்கிட்ட போய் காலை காட்டணும்.



தூங்கி எந்திரிச்சா காபி
எந்திரிக்கவே இல்லன்னா பால்
இது தாங்க வாழ்க்கை ....

நோயாளி : டாக்டர், என்னால சரியா சாப்பிடமுடியல....
டாக்டர் : நல்ல விசயம் தானே உன்னால சாப்பிட முடியாத சாப்பாட்டை நாலு பிச்சைக்காரங்களுக்குப் போடு உனக்குப் புண்ணியமா போகும்.

கணவன் : திருக்குறளும் உங்கம்மா பேச்சும் ஒன்னுதான்
மனைவி : எப்படிச் சொல்றே?
கணவன் : இரண்டுலேயும் அதிகாரம் இருக்குதே..!

மகன் : அப்பா, நீச்சல் தடாகம் கட்ட நன்கொடை கேட்டு வந்திருக்காங்க ....!
அப்பா! : அப்படியா? சரி ஒரு செம்பு தண்ணீர் கொடுத்து அனுப்பு!

சி.சிவசர்மினி
கீழ் வகுப்பு ஆசிரியர் (N.C.A)

# சினிமா வாழ்க்கை

இளைய தளபதி விஜய் இவரை உலக அளவில் தெரியாதவர் எவருமில்லை. இவரது இயற்பெயர் ஜோசப். விஜய் சந்திரசேகரர் தனது தந்தையின் படங்களில் சிறு வயது முதல் நடித்து வருபவர். மிகப்பெரிய இயக்குனர் சந்திரசேகரர், பாடகியான ஷோபா ஒரு சிறந்த தயாரிப்பாளர், கதாசிரியர் இத்தனை பின் புலங்கள் இருந்தும் தனக்கென ஒரு முத்திரை பதிக்க தன் முயற்சிகளையும், ரசிகர்களையும் நம்பி முன்னிலைக்கு வந்தவர் விஜய்.



1974ம் ஆண்டு June 22ம் திகதி சென்னையில் பிறந்தவர். சென்னையில் லெயிலா கல்லூரியில் பயின்று சினிமாத் துறையில் தன் தந்தையுடனேயே "வெற்றி" என்ற படத்தின் மூலம் அறிமுகமாகி அதன் பின்னர் "நான் சிவப்பு மனிதன்", "சட்டம் ஒரு விளையாட்டு" ஆகிய படங்களில் குழந்தை நட்சத்திரமாக தோன்றியது குறிப்பிடத்தக்கது.

1990ம் ஆண்டு தன் தந்தை இயக்கிய "நாளைய தீர்ப்பு" என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார். அதன் பின் தன் தந்தையின் இயக்கத்தில் தொடர்ந்து 4 படங்களை நடித்தார். 1995ம் ஆண்டு இன்றைய தமிழ்

| ஆண்டு | பாடங்கள் |
|---|---|
| 1984 | வெற்றி |
| 1985 | நான் சிவப்பு மனிதன் |
| 1987 | சட்டம் ஒரு விளையாட்டு |
| 1992 | நாளைய தீர்ப்பு |
| 1993 | செந்தூரப் பாண்டி |
| 1994 | ரசிகன், தேவா |
| 1995 | ராஜாவின் பார்வையிலே, விஸ்ணு, சந்திரலேகா |
| 1996 | கோயம்புத்தூர் மாப்ளே, பூவே உனக்காக செல்வா, வசந்த வாசல், மாண்புமிகு மாணவன் |
| 1997 | லவ்ருடே, ஒன்ஸ்மோர், நேருக்குநேர், காதலுக்குமரியாதை |
| 1998 | நினைத்தேன் வந்தாய், நிலவே வா, ப்ரியமுடன் |
| 1999 | துள்ளாத மனமும் துள்ளும், நெஞ்சினிலே, மின்சாரக்கண்ணா, என்றென்றும் காதல் |

| ஆண்டு | பாடங்கள் |
|---|---|
| 2000 | கண்ணுக்குள் நிலவு, குஷி, ப்ரியமானவளே |
| 2001 | (f)ப்ரெண்ட்ஸ், பத்ரி, சாஜஹான் |
| 2002 | யூத், பகவதி |
| 2003 | வசீகரா, புதியகீதை, திருமலை |
| 2004 | உதயா, கில்லி, மதுர |
| 2005 | திருப்பாச்சி, சச்சின், சுக்ரன், சிவகாசி |
| 2006 | ஆதி |
| 2007 | போக்கிரி, அழகிய தமிழ்மகன் |
| 2008 | குருவி,பந்தயம் |
| 2009 | வில்லு, வேட்டைக்காரன் |
| 2010 | சுறா |
| 2011 | காவலன், வேலாயுதம் |
| 2012 | நண்பன், துப்பாக்கி, ரவுடிரத்தோர் |
| 2013 | தலைவா |
| 2014 | ஜில்லா, கத்தி |

சினிமாவின் அதிக ரசிகர்கள் பட்டாளங்களை கொண்ட விஜய், அஜித் ஆகிய இருவரும் இணைந்து "ராஜாவின் பார்வையிலே" என்ற படத்தில் நடித்தார். அதன் பிறகு இருவரும் இணைந்து நடிக்கவில்லை. இடையில் பலர் இந்த முயற்சியில் ஈடுபட்டு இன்னும் கைகூடாமலே உள்ளது. இதேவேளை விஜய் இதுவரை நடித்த நடிகைகளில் தனக்கு பிடித்தவர் த்ரிஷா என்பதை ஒருமுறை ஊடகங்களிடம் ஒப்புக்கொள்ளவும் தவறவில்லை.

இதில் "ரசிகன்", "பூவே உனக்காக", "லவ்ருடே", "ஒன்ஸ்மோர்", "நேருக்கு நேர்", காதலுக்குமரியாதை", "நினைத்தேன் வந்தாய்", "ப்ரியமுடன்", "துள்ளாத மனமும்துள்ளும்", "குஷி", "ப்ரியமானவளே", "ப்ரெண்ட்ஸ்", "திருமலை". "கில்லி", "மதுர", "திருப்பாச்சி", "சிவகாசி", "போக்கிரி" "காவலன்", நண்பன்", "துப்பாக்கி", "ஜில்லா", "கத்தி", ஆகியன வெற்றிப்படங்கள் குறிப்பாக "காதலுக்கு மரியாதை"

இவரின் வாழ்க்கையில் ஒரு திருப்பம். அதன் பின்னர் "கில்லி" திரைப்படம் (தெலுங்கில் ஒக்கடு) இவரை ஒரு மாஸ்கீரோ ஸ்தானத்தில் கொண்டு சென்றது. அன்றிலிருந்து இளைய தளபதி விஜய் இளைஞர்களின் உள்ளம் கவர் தளபதியாகவே இருந்து வருகிறார்.

குறிப்பாக இவரது நகைச்சுவை கலந்த கதாபாத்திரங்கள் பெண்கள் முதல் குழந்தைகள் வரை கவர்வது குறிப்பிடத்தக்கது. இவரது நடனம் தமிழ் சினிமாவை ரசித்துப் பார்க்கும் ரசிகர்கள் பொலிவூட் வரை அனைவரையும் கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"கில்லி" இவரது அனைத்துப் படங்களையும் விட சாதனைகளையும் முறியடித்து வெற்றி கரமாக ஓடியது. அதன் பிறகு "திருப்பாச்சி", "போக்கிரி" ஆகிய படங்கள் அந்த வசூல் சாதனைகளை விட கடந்தது.

இவை அனைத்தையும் விட A.R.முருகதாஸ் இயக்கத்தில் "துப்பாக்கி" திரைப்படம் அந்த வசூல் சாதனைகளை கடந்து 400 கோடி அளவில் சாதனை படைத்தது.

இவரின் "தலைவா" திரைப்படம் வெளியீட்டின் போது பல அரசியல் இடையூறுகள் காரணமாக கிட்டத்தட்ட 1 மாத காலம் வரை அத்திரைப்படம் வெளியிடாமல் பல சிக்கல், தடங்கல்கள். தடைகளைத் தாண்டி உச்சத்தில் நிற்கும் ஒரு நடிகர்.

அத்துடன் இவர் பாடகராகவும் தன்னை அடையாளப்படுத்தி அதில் வெற்றியையும் கண்டுள்ளார். இதுவரை 28 பாடல்களை பாடியுள்ளார். முக்கியமாக இவர் நடிக்கும் படங்களில் பாடல்கள் அனைத்தும் சுப்பர் ஹிட்டாவது குறிப்பிடத்தக்கது.

தனது ரசிகையான யாழ்ப்பாணம் சங்கானையில் இருந்து குடிபெயர்ந்து இங்கிலாந்தில் வசித்த சங்கீதா என்பவரை காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் 1999ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சஞ்சய், திவ்யா என இரு அழகான குழந்தைகள் உள்ளனர். இதில் தன் மகன் பிடிவாதமாக நின்றதால் "வேட்டைக்காரன்" திரைப்படத்தில் ஒரு பாடலுக்கு ஆட வைத்ததன் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகப்படுத்தினார்.

இவர் பல தமிழ் நாட்டு விருதுகள், ViJay Awards, தினகரன் விருதுகள் எனப் பல விருதுகளுக்கு உரித்துடையவர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

- இ.விதுர்ஷா -

# நட்பிற்கும் மரத்துக்குமுள்ள ஒற்றுமை

எந்தவொரு மனிதனிற்கும் காதல் வராமல் கூட இருந்திருப்பார். ஆனால் நட்பில்லாமல் இருத்திருக்க மாட்டார்கள், நட்பினால் மக்கள் நன்மையும் அடைந்திருப்பார். தீமையும் அடைந்திருப்பார். அது போல் தான் எப்படியான வகையுள்ள நண்பர்கள் உள்ளார்கள் என்றும் அவர்களிற்கு ஒற்றுமையான மரங்களையும் நாம் கண்காணிப்போம்.

## நட்பை மூன்று வகையாகப் பிரிப்பர்

- ஒன்று வாழைமரம் போன்ற நட்பு
- இரண்டு தென்னைமரம் போன்ற நட்பு
- மூன்று பனைமரம் போன்ற நட்பு

வாழைமரம் தனக்குத் தேவையான நீர், கனியுப்பு அனைத்தையும் நாம் அதற்குக் கொடுக்கின்றோம். பின்னர் அது ஒரு வாழைக்குலையை மட்டும் போட்டுவிட்டு இறக்கின்றது. அது போலத் தான் சில நண்பர்கள் தங்களுக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுவிட்டு எம்மை ஆபத்தில் சிக்க வைத்து விட்டு போவபவர்கள் இவரையே நாம் வாழைமரம் போன்ற நண்பர்கள் என்போம்.

தென்னைமரம் தனக்குத் தேவையான நீரை நாம் கொடுத்தால் தான் அது நமக்கு இளநீரையோ அல்லது தேங்காயையோ தருகின்றது. அதேபோலத்தான் சில நண்பர்கள் தன்னுடைய உதவியை எதிர்பார்த்து சில நண்பர்களுடன் நட்பு கொள்வார்கள். இவர்களையே நாம் தென்னைமரம் போன்ற நண்பர்கள் என்போம்.

பனைமரம் அதற்கு நாம், நீர் ஊற்றத் தேவையில்லை அது தானாகவே வளர்கின்றது. அது நமக்கு எல்லா விதத்திலும் எல்லாப் பாகத்திலும் உதவுகின்றது. அது போல் தான் எதையுமே எதிர்பாராமல் வரும் நட்புத் தான் இது இதனை பனைமரம் போன்ற நட்பு என்போம்.


■ இ.விதுர்ஷா

உங்களுக்கும் நட்பு உண்டா!



சிறுகதை தொடர்

# அனுவின் வாழ்க்கைப் பாதை



அனு தனது அம்மாவின் கனவை நிறைவேற வேண்டும் என்பதற்காக மருத்துவத்துறையையும், கீர்த்தி தன்னால் இயன்றளவு வணிகத்துறையையும் தெரிவு செய்து படிக்கத்தொடங்கினர். அனு நன்றாகப் படித்து வந்தாள். சில நாட்கள் சென்றதும் தங்கம்மாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தங்கம்மாவிற்கு புற்றுநோய் ஆரம்பநிலையென வைத்தியரால் அனுவின் குடும்பத்துக்கு அறிவிக்கப்பட்டது. அனுவின் குடும்பத்தார் கவலை அடைந்தனர். அனுவின் மனநிலை குழம்பியது. ஆனாலும் ஆரம்பநிலை என்பதால் கவலைப்பட வேண்டாம் என வைத்தியர் ஆறுதலுக்காக கூறினார். ஆனால் அனுவால் கல்வியில் கவனம் செலுத்த முடியவில்லை. பரீட்சையும் நெருங்கியது. அனு பரீட்சை எழுதினாள். பரீட்சையின் பெறுபேறு அனு மருத்துவர் ஆவதற்கான தகுதியைப் பெற்று கொடுக்கவில்லை. தொடர்ந்தும் தங்கம்மாவிற்கு மருத்துவம் செய்யப்பட்டது. தங்கம்மாவால் வேலைக்கு செல்ல முடியாத காரணத்தினால் அனுவின் சகோதரன் உறவினர்களின் உதவியுடன் வெளிநாடு சென்று உழைத்து செலவிற்கும் தங்கம்மாவின் வைத்தியச் செலவிற்கும் பணம் அனுப்பினார். தங்கம்மாவிற்கு மேலும் தனது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி கவலை ஏற்பட்டது. தங்கம்மாவின் உறவினர் மற்றும் அனுவின் நண்பர்களின் அறிவுரைப்படி யாழ்ப்பாணத்தில் உள்ள கீர்த்தியின் வீட்டில் தங்கி படிக்க தங்கம்மா அனுமதி கொடுத்தார். கீர்த்திக்கு அனுவின் வருகையால் மிகுந்த மகிழ்ச்சி. அனு தங்கம்மாவின் இலட்சிய கனவுகளை சுமந்தபடி யாழ்ப்பாணம் சென்று படிக்கத்தொடங்கினாள். தினமும் அனு தங்கம்மாவுடன் தொலைபேசியில் உரையாடுவாள். இவ்வாறே இரண்டு மாதங்கள் கடந்து சென்றது. யாரும் எதிர்பாராத அளவிற்கு அனுவிற்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. அனுவின் வாழ்வில் அடுக்கடுக்காய் பிரச்சினை எழத்தொடங்கின. அனுவின் சகோதரியிடம் இருந்து மாலை 6 மணியளவில் தொலைபேசி அழைப்பு வந்தது. தங்கம்மா இறந்து விட்டார் என்ற துக்க செய்தியை அனுவிடமே கூறினார். அனுவிற்கு பேரதிர்ச்சியாக இருந்தது. அவளால் நம்பவே முடியவில்லை. "அம்மாவிற்கு அப்படி நடந்திருக்காது" என கதறி அழுதாள். கீர்த்தியினால் எவ்வாறு ஆறுதல் கூறுவது என்றே தெரியாமல் தடுமாறினாள். கீர்த்தியின் குடும்பத்தினர் அனுவை உடனே அவளது வீட்டுக்கு அழைத்து சென்றனர். யாராலும் தங்கம்மாவின் இழப்பை தாங்கமுடியவில்லை. அனைவரது கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்தது. பின் தங்கம்மாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அனைத்து சடங்குகளையும் முடித்துவிட்டு சில நாட்கள் உறவினரோடு இருந்து ஆறுதல் அடைந்தாள். இரண்டு மாதங்கள் கடந்து சென்றன. கீர்த்தி அனுவிற்கு பல அறிவுரைகளையும் ஆறுதல்களையும் கூறி மீண்டும் கல்வியைத் தொடரவேண்டும் என வேண்டிக் கொண்டாள். அனு தனது தாயாரின் சடங்குகளை முடித்த பின் தங்கம்மாவின் கனவை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு காரணத்தால் அனு மீண்டும் தன் கல்வியைத் தொடங்கினாள். கவலைகள் நிறைந்த இதயத்தில் இலட்சியமும் தங்கம்மாவின் கனவும் அனுவின் மனதில் வேரூன்றியது. மீண்டும் பரீட்சை தொடங்கியது. அனு பரீட்சையை நன்றாகச் செய்தாள். சில மாதங்கள் கழித்து பரீட்சை பெறுபேறு அனு வைத்தியராவதற்கான புள்ளியைப் பெற்றுக்கொடுத்தது. இது அனுவிற்கும் அவளது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் மகிழ்ச்சியை தந்தது. அனுவின் திறமையும் அவளின் விடாமுயற்சியும் அனுவின் வாழ்வை பிரகாசமடையச் செய்தது. தன்முயற்சியால் தங்கம்மாவின் கனவு நிறைவேறியது என்பதைவிட ஓர் ஏழைத்தாயின் கனவு நனவாகியது என எண்ணி தன் தாயை நினைத்து கண்ணீர் சிந்தி அழுதாள் அனு.....

*முற்றும்*


கதை ஆசிரியர்
ச. லாவண்யா.

# புத்திசாலிக்கிளி

ஆபிரிக்ககிளி ஒன்றை கூட்டினுள் வைத்து ஒருவர் வளர்த்து வந்தார் ஒருமுறை அவர் ஆபிரிக்கா செல்லும் போது கிளி சொல்லியதாம் “என் ஜோடிக்கிளி அங்கிருக்கும் அதனிடம் நான் இங்கு கூட்டில் இருப்பதாகச் சொல்லுங்கள் அவரும் தன் வேலை முடிந்த பின் சிரமப்பட்டு காட்டில் தனியாக இருந்த அந்தக்கிளியைக் கண்டு விபரம் சொல்ல அது உடனே கண்ணீர் விட்டுக்கீழே சுருண்டு விழுந்து விட்டது. அடடா இந்தக்கிளி இறந்ததற்கு நாம் காரணமாகி விட்டோமே என்று வருத்தப்பட்டு ஊருக்கு வந்து கூட்டுக்கிளியிடம் விபரம் சொல்ல அந்தக்கிளியும்



கண்ணீர் விட்டுக் கூட்டினுள்ளேயே விழுந்துவிட்டது நம்மால் இந்தக்கிளியும் அநியாயமாய் இறந்துவிட்டதே என்ற வருத்தத்துடன் கூட்டைத் திறந்தார். உடனே அந்தக்கிளி ஜிவ்வென்று பறந்துபோய் பக்கத்திலிருந்த மரக்கிளையில் அமர்ந்து உடனே அவர் உன் ஜோடிக்கிளி இறந்தது தெரிந்தும் நீ என்னிடம் நடித்துத் தப்பி விட்டாயே! என்றார். அதற்கு அக்கிளியும் என்ஜோடிக்கிளியும் இறக்கவில்லை கூட்டில் அடைப்பட்ட நான் தப்பிக்கும் வழியை உங்களிடமே அது சொல்லி அனுப்பியிருக்கின்றது. என்று கூறிவிட்டுத் தன் ஜோடிக்கிளியைத் தேடி பறந்து விட்டது. ஜோடிகளைப் பிரிப்பது பாவம் அல்லவா...! பறவைகளை கூட்டுக்குள் அடைக்காதீர்கள் சுதந்திரம் நமக்கு மட்டுமல்ல அவைகளுக்கும் தான்.



- இ.சுவேதா -


SRI AMBAAL JEWELLERS

ஸ்ரீ அம்பாள் ஜீவலர்ஸ்




பிரதான வீதி, நெல்லியடி

T.P : 0776308422

22 கரட் தங்க நகை வியாபாரம்

# கன்டோஸ் தயாரிக்கும் முறை

*(20 - 25 கன்டோஸ்)*



தேவையான பொருட்கள் :-

| | |
|---|---|
| பால்மா | - 2 மேசைக்கரண்டி (நிரப்பி) |
| சீனி | - 2 மேசைக்கரண்டி (நிரப்பி) |
| கொக்கோ | - 1 மேசைக்கரண்டி (நிரப்பி) |
| மாஜரின் | - 1 மேசைக்கரண்டி (நிரப்பி) |
| தண்ணீர் | - 2 மேசைக்கரண்டி (நிரப்பி) |
| வனிலா | - 1 மேசைக்கரண்டி (நிரப்பி) |
| கஜீ | - 20 பாதி |
| மாஜரின் | - 50 கிராம் பொரிப்பதற்கு |

செய்முறை :-

- இருபது பாதிக் கஜீக்களை, 50 கிராம் மாஜரினைத் தாச்சியில் காயவைத்துப்போட்டு பொரித்தெடுத்துக் கொள்க.
- பால்மாவையும் கொக்கோப்பவுடரையும், ஈரமற்ற பாத்திரத்தில் போட்டுக் கலந்து வைத்துக்கொள்க.
- தாச்சியில் சீனியைப் போட்டு, 2 மேசைக்கரண்டி நீர் விட்டுப் பாகு காய்ச்சுக, பாகு காய்ச்சும் போது, முதலில் சீனி முழுவதும் கரைந்து, வெளுப்பான நுரைப்பதம் தோன்றி மறைந்து பாகு பொங்கிக் கொதிக்கத் தொடங்கும் போது விரல்களால் தொட்டுப்பார்க்கும் போது பிசுபிசுப்பாகக் கையில் ஒட்டும் பதத்தை அடைந்ததும், மாஜரினை அதனுள் போட்டு மாஜரின் உருகியதும் அடுப்பிலிருந்து தாச்சியை உடனடியாக இறக்கி வனிலாவும் சேர்த்துப் பிறிதொரு பாத்திரத்தில் ஊற்றிக்கொள்க.
- பின்பு பாகு உள்ள பாத்திரத்தைக் குளிர்நீருள்ள பாத்திரத்தில் பாகின் சூடு ஓரளவு தணியும் வரை வைத்துக்கொண்டு அதனுள் கலந்து வைத்துள்ள பால்மாக்கலவையைக் கொட்டி நன்றாகச் சேர்த்துக் கொள்க.
- பின்பு இக்கலவையைப் பெரிய நெல்லிக்காயளவு உருண்டைகளாக உருட்டிக்கொண்டு பொலித்தீன் காகிதத்தில் வைத்து மெல்லியதாக தட்டிக்கொண்டபின், பொரித்த கஜீவை நடுவே வைத்துப் பொலித்தீனில் பரவியுள்ள கலவையைக் கஜீவை மூடும் வண்ணம் பொலித்தீன் பேப்பரால் சீர்படுத்தியபின்பு, எடுத்துப் பரிமாறலாம்.

குறிப்பு :-

கஜீக்குப் பதிலாக ஒரு அங்குல நீளமான வேபர்ஸ் பிஸ்கட்டையும் பயன்படுத்தலாம் அல்லது சாதாரண உருண்டைகளாகவும் உருட்டிக் கொள்ளலாம்.

கோ.கோபி
மனைப் பொருளியல் மாணவி

# ஆயுள் வேதம்

## உடல் சூட்டைத் தணிக்கும் பறங்கிக்காய்

பறங்கிக்காயில் வைட்டமின்கள் B, C ஆகிய சத்துக்கள் சிறிதளவு உண்டு குளிர்ச்சி சுபாவம் இருப்பதால் இதை சாப்பிட்டால் உடம்பு சூடு நீங்கும் பித்தம் போகும் பசியை தூண்டும். சிறுநீர் பெருகும்.




இது வீரியபுஷ்டியை ஏற்படுத்துவதுடன் மூல நோய், எரிச்சல். தாகம், வயிற்றுப்பொருமல் ஆகியவற்றை குணப்படுத்தி விடும்.

பரங்கிக் கொடியின் நுனியில் காணப்படும் தளிர்களை கறி செய்து சாப்பிட்டால், வயிற்றுப் பையில் காணப்படும் பொருமல், வாய்வு, குன்மம், வறட்சி முதலிய குறைகள் நீங்கப்பெற்று நல்ல பசி உண்டாகும்.

பரங்கிக்காயின் விதைகளை உலர்த்தி எடுத்து உரித்து சாப்பிட்ட வந்தால் உடல் புஷ்டி ஆகும்.

பரங்கிக்காயுடன் பருப்பு சேர்த்து கூட்டு மாதிரி செய்து சாப்பிடலாம். கறி செய்வதற்கும், சாம்பாரில் சேர்ப்பதற்கும் கூட இதை பயன்படுத்திக் கொள்ளலாம்.

## எலுமிச்சம் பழம்



எலுமிச்சம் பழத்தை ஒரு சர்வரோக நிவாரணி என்று சொல்லலாம். அந்தளவுக்கு நோய்கள் வராமல் தடுத்து உடல் நலத்தை காத்துக்கொள்ள என்னென்ன பொருட்கள் அவசியம் தேவையோ, அவைகள் அனைத்தும் இந்த பழத்தில் இருக்கின்றன.

முக்கிய வைட்டமின் சத்தான வைட்டமின் சி, எலுமிச்சம் பழத்தில் நிறைய இருக்கிறது. 14 எலுமிச்சையில் இருக்கும் சிட்ரிக் அமிலம் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. அதனால் தொற்று நோய் கிருமிகளின் தாக்குதலில் இருந்து உடலை கண்போல பாதுகாக்கின்றது.


இரத்தக் கொதிப்பைத் தடுப்பதில் எலுமிச்சம் பழம் மிக முக்கிய பங்காற்றுகிறது. மேலும் செ

இரத்தத்தை தூய்மைப்படுத்துவதற்கு எலுமிச்சம் பழத்தை விட மேலான ஒன்று கிடையாது.

எலுமிச்சம் பழ ரசத்தை சாப்பிட்டால் மண்ணீரல் வீக்கம் பிரச்சினையில் இருந்து விடுபடலாம்.

இத்தனை நன்மை செய்யக்கூடிய எலுமிச்சம் பழத்துக்கு மலத்தை கட்டக்கூடிய குணமும் உ

ஆனாலும் தேன் சேர்த்து உண்டு வந்தால் மலக்கட்டு நீங்கி விடும்.



## சீதளத்தைப் போக்கும் காய்

சுரைக்காய் குளிர்ச்சியான சுபாவம் கொண்டது: இதனால் இது சூட்டைத் தணிக்கும் சிறுநீரைப் பெருக்குவதுடன், உடலை உரமாக்கும். இதுவொரு சிறந்த மலச்சுத்தி காய் ஆகும். தாகத்தை அடக்கவல்லது.

கருஞ்சுரைக்காய் என்று ஒரு வகை இருக்கிறது. அது குளிர்மை செய்வதுடன் தாகத்தை அடக்கும் அத்துடன் சீதளத்தையும் பித்தத்தையும் போக்கும்

ஆனால் அஜீரணத்தை உண்டாக்கி விடும்.

ஆனால் சுரைக்காய் பித்த வாயுவை உண்டு பண்ணும் சக்தி உடையது. ஆகையால் அடிக்க சாப்பிட வேண்டாம்.

## கவிதைப்போட்டி

**மாணவர்களின் எழுத்தாற்றலையும் திறமையினையும் வெளிப்படுத்தும் நோக்குடன் யாழ் முழக்கம் சஞ்சிகை கவிதைப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. போட்டியில் மாணவர்கள் அனைவரும் பங்கு பற்ற முடியும்.**

**பின்வரும் தலைப்புக்களில் ஒன்றை தெரிவு செய்து எட்டு வரிகளிற்கு குறையாமல் கவிதையை எழுதி அனுப்பவும்.**

### போட்டித் தலைப்பு

- *பெண்மை .....*
- *நம்பிக்கை .......*

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**யாழ்முழக்கம்**
**கவிதைப்போட்டி**
**பிரதம ஆசிரியர்**
**வே.தவச்செல்வம்**
**தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.**

# சில டிப்ஸ்

பெண்கள் தம்மை அழகுபடுத்துவதிலும், மேக்கப்பொருட்களிலுமே அதிக நாட்டம் அதிக நேரத்தையும் அதிக பணத்தையும் செலவு செய்கின்றனர்.
அதிக செலவு செய்யாமல் நமக்குஅன்றாடம் கிடைக்கும் பொருட்கள் மூலமே நாம் அதனைத் தக்க வைக்கலாம்.

- கொழுப்பு சீனி கலந்த பொருட்களை அதிகம் உண்பதை விட மரக்கறி, பழங்கள் என்பவற்றை அதிகளவாக உட்கொள்ளலாம். நாம் மரக்கறி வகைகளை சலட் செய்து பச்சையாக உண்டாலும் நாளாந்த உணவு வேளையின் பின்னர் பழத்தினை உண்டால் நமது தேகம் பொலிவுடனும், ஆரோக்கியத்துடனும் இருக்கும்.

- இரவு உணவு உண்டு உறங்கமுன்னர் முகத்தினை நன்கு கழுவி தூய்மையான சிறு துணியால் நீரை ஒற்றி எடுத்து விட்டு பின்பு சிறு தட்டில் கடலைமா எடுத்து பன்னீர் அல்லது கற்றாளைச்சாறு அல்லது தோடம்பழச்சாறு அல்லது மாதுளம்பழச்சாறு கலந்து அதனை நடுநிலையான பதத்திற்கு குளைத்து எடுத்துவிட்டு முகத்தினில் அதனைப் பூசி 15 நிமிடம் ஊறவிட்டுவிட்டு முகத்தினைக் கழுவினால் பட்டுப்போன்ற முகம் கிடைக்கும்.

- நாம் பாவனை செய்யும் சவர்க்காரத்திற்குப் பதிலாக கடலை மா பூசி முகம் கழுவினால் பட்டுப் போன்ற முகத்தினைப் பெறலாம். பார்ப்பதற்கும் அழகாகத் திகழும்.

- முகத்தில் அரும்புகள் போன்ற அமைப்பில் முடி உள்ளவர்களிற்கு கட்டி மஞ்சளை சாந்தாக அரைத்து முகத்தில் பூசி 30நிமிடம் முகத்தினை ஆட்டாமல் அசைக்காமல் வைத்துபின்பு நீர் ஊற்றி அதனை இளகச்செய்து முகத்தினை நன்கு கழுவி எடுக்கவும் இதனை தினமும் செய்து வந்தால் முகத்தில் உள்ள அரும்புகள் போன்ற முடி கொட்டுப்படலாம். (இரவு வேளையில் பூசவும்)

- முகத்தில் அப்பிள், தோடம்பழம், தர்ப்பூசணி, மாதுளை, பப்பாசி, கற்றாளை இதில் ஏதாவது ஒரு பழத்தை வாரம் இரு தடவை முகத்தில் சலற் செய்து பூசினால் முகம் பார்ப்பதற்கு அழகாக காட்சியளிக்கும்.

- இனிப்புத்தன்மை, புளிப்புத்தன்மை கூடிய பழங்களை அதிகம் உண்ண வேண்டாம் நமது சருமத்தில் வறட்சித் தன்மையைத் தரும்.

- தினமும் இரவு வேளை உணவு உண்டபின்பு ஆடை நீக்கிய பால் அருந்துங்கள் அதில் சிறிதளவு குங்குமப் பூ கலந்து குடித்தால் முகம் சிறிது நிறக்கும்.

- நாம் சமையலின் போது தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக சூரிய காந்தி எண்ணெய், கனொலா எண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

- தினமும் நீர் நிறையக் குடிக்க வேண்டும் குடிப்பதால் வியர்வை அதிகமாக வெளியேறும் இதன் மூலம் நமது உடலிலுள்ள கழிவுகள் வெளியேறுவதால் முகம்,உடல் என்பன பிரகாசமாக காணப்படும்.

**இ. விதுர்ஷா**

# யாழ்முழக்கம் சஞ்சிகையின் வெளியீட்டு விழாவின் பதிவுகள் சில


















Global computer Printers
Saraiyady, Puloly. T.P No : 0783035181